திராவிடநாடு

26—7—59 | வார வெளியீடு | விலை 16 காசு

சிறைக் கடிதம்!

[கா. வேழவேந்தன்]

அன்னையே! என்னை ஈன்ற
    அன்புள்ள தாயே! மீண்டும்
தென்னவர் குருதி கேட்டுச்
    சேதியும் வந்த தம்மா!
பொன்னுன தமிழி ருக்க
    புழுதியாம் ஆகாஷ் வாணிக்
கென்னவாம் வேலை யென்று
    எழுந்தது மறவர் வெள்ளம்!

பலமுறை இந்திப் பெண்ணின்
    பல்லினை உடைத்தோம்! மீண்டும்
அலகைபோல் புகுந்தா ளென்றால்
    அனையிட வேண்டாமா நாம்?
குல்முறை மானங் காக்கக்
    கொடியினைக் கையில் ஏந்தி
பலர்களம் புகுந்தார்; அந்தப்
    படைசேர்ந்தேன், சிறையும்
        சேர்ந்தேன்!

சாவது திண்ணம்; இன்று
    தமிழ்காக்கச் செத்தால் என்ன?
போவது உறுதி; மானப்
    போரிட்டு மடிந்தால் என்ன?
காவலில் வைத்தா ரென்று
    கவலைநீ கொள்ள வேண்டாம்
ஆவது உறுதி ஒன்று
    ஆணவம் அழிந்தே தீரும்!

பகைவரை மிதிப்ப தற்கே
    பாலூட்டி வளர்த்தாய் எம்மை!
வகைகெட்டோர் இந்தி மாட்டை
    வண்டமிழ்க் காவில் மேய்த்தால்
புகையைப்போல், எலும்பே இல்லாப்
    புழுவைப்போல் வாழ லாமா?
தொகையாக வீட்டுள் ளோரை
    தொடர்ந்துநீ அனுப்பு அம்மா!

என் இந்த விழா?

—[தி. அ. சண்முகம்]—

மரணமடைந்தான்-அந்தோ பரிதாபம்! அந்த இடத்திலேயே மரணமடைந்தான்!...

ஏன் மரணமடைந்தான்?...?...

அடிமை விலங்கொடிப்பேன் என்று ஆர்பரித்தான். ஆண்டை—அடிமை என்ற பேதம் கிடையாது என்று வீரமுழக்கம் கிளப்பி விடுதலை அடையப் பாடுபட்டு அதற்குப் பரிசாக மூன்று குண்டுகளால் அந்த இடத்திலேயே மரணமடைந்தானே அமெரிக்காவிலே ஆப்ரகாம்!... அதுபோன்ரு?... .

"இத்தாலிய நாடு—இத்தாலியர்களுக்கே" இங்கே இன்னொருவர்களுக்கு வேலை இல்லை. எங்கள் நாடு—எங்கள் மொழி — எங்கள் இனம்! ஆகவே இத்தாலி இத்தாலியர்களுக்கே என்று இருதய ஒலி எழுப்பினனே கரிபால்டி! அதற்கு இதோ எங்கள் காணிக்கை என்று சிறைவாசம்—நாடு கடத்தல் அத்தனையும் அளித்து, குதிரையில் தானும் தன் அன்பு மனைவியும் காட்டிலே ஓட ஓடப் பகைவனல் குண்டடிபட்ட மனைவியைப் புதைப்பதற்கு நேரமில்லாது கண்களால் பேசி,உதடுகளின் ஓரத்திலே நெளியும் நயன மொழிகளிலேவிளையாடிச் சிவந்த கன்னங்களிலே முத்துப்பற்களினல் தெரித்த வடுக்களை வண்ணமலர் கைகளினல் ஏற்பட்டது என்று இன்பப் படகிலே பறந்து சென்றவளைக் துன்பக் கேணியிலே, பிரிகின்ற உயிரோடு ஒருகுழியாவதுவெட்டிப்புதைத்து, ஒரு கண்ணீர்த்துளியைக் காணிக்கையாக்கி இறுதி சடங்கு என்று நினைத்து செலுத்திவிட்டு ஓடினன் ஓடினன், என் நாடு எனதே என்பதற்காக! தப்பி ஓடினன். மக்கள் மாமன்றத்தை ஒன்று கூட்டி அழைத்தான்! கூக்குரலிட்டான் 'இத்தாலிய நாடு — இத்தாலியர்களுக்கே' என்று! இறுதி மூச்சும் நின்றது. மரணமடைந்தான்...... இதுபோன்ரு?...

உலகம் போற்றும் உத்தமராம்—அகிம்சாமூர்த்தியாம்— அண்ணல் காந்தி! 'வெள்ளையனே — வெளியேறு' என்று வீர முழக்கம் செய்து வெற்றி பெற்றவர்—ஒரு மத வெறியனல் மரணமடைந்தார் ...இதுபோன்ரு?...

அல்ல, அல்ல! மரணமடைந்தான்? 14 வயது சிறுவன் மரணமடைந்தானும். அந்தோ... பரிதாபமாக வெளிவரும் செய்தி.

அதுவும் எங்கே... அண்ட சராசரங்களையே அடக்கி ஆள்பவர். மூன்று ஜகத்தையும் படைத்து இரட்சித்து அருள் தருபவர்.

அவர்தான் ஜகந்நாதர். பூரி ஜகந்நாதரின் தேர் இழுக்கப்பட்டதாம். அதன் சக்கரத்தின் அடியில் சிக்கி அந்த இடத்திலேயே மரணமடைந்தானும் 14 வயதுச் சிறுவன். ஜூலை 16ந் தேதி புவனேஸ்வரத்தில் நடந்திருக்கிறது.

உணர்ச்சியால் உந்தப்பட்டு பிளிறி வரும் களிறு போன்று கிளர்ச்சிசெய்து அதன் பொருட்டுப் புரட்சியே உருவெடுத்துப் போராட்டம் நடத்தி அதில் மாண்டானு?...

அந்த சிறுவனுடைய எதிர்காலத்தை நோக்கி இருந்த தாய் தந்தையரின் ஆசைகள்-எண்ணங்கள் எப்படி எப்படியோ பொங்கி வரும் எரிமலைபோன்று அடிவயிறு எரிய எரிய தணலாக மாறி இருக்காதா?

அதையும் தான் பார்த்துக் கொண்டிருந்தார் 'ஜகத்தை'யே ஆளும் ஆண்டவன்.

மகனுக்கேற்ற மருமகளைத் தேடிய உள்ளம், மகனும்— மருமகளும் வீதியின் ஒருபுறத்தே நடந்து வரும் அழகை—அவர்கள் 'பேசாமல் பேசி—விழிகளால் கருத்துக்கள் பரிமாறி, புன்சிரிப்போடு வீட்டிற்கு வந்தஉடன் பலர் கண்டு பொருமைப்படுவார்களோ என்று ஐயுற்று 'கண்ணே, முகம் வீங்கி இருக்கிறதே போய்ப் பத்துப் போடம்மா' என்று மருமகளை கண்களால் அன்புகாட்டிச் சொற்களால் கடிந்து, மகனையும் அன்புள்ளத்தால் சினந்து, மகனின் தலையை கோதுகின்றவரையில் மனம் நிம்மதியோடு இல்லாமல் அலையும் உள்ளம்தான் — அந்த பாசம்தான் இப்பொழுது எப்படித் துடிக்கின்றதோ — பதறுகின்றதோ! நாமறியோம்!

பெற்றவளுக்குத்தானே பிள்ளையின் அருமை தெரியும்!...அதையும்தான் அந்த ஆண்டவன்—தேரின் கண் கொலுவீற்றிருப்பவன் பார்த்துக்கொண்டே இருக்கிருர்—ஆடாமல் அசையாமல்!

எங்கெங்கோ— எவரெவரோ--எப்படி எப்படியோ மரணமடைந்தார்கள்: இது முன்னுள் முன்னுரை.

அவனும்தான் — அந்த "சிறுவனும்" தான் மரணமடைந்தான்: இது முடிவுரை.

முன்னுரையிலே:— அவரவர்களுடைய மரணத்திற்கு ஆண்டவன் அருள் தந்தாரா? அல்ல—அல்ல! அவர்களுடைய கல்லறைகளிலே புகழோடு வீர காவியம் வரையப்பட்டது. என்றென்றும் உலகம் போற்றும்—வாழ்த்தும்!

முடிவுரையிலே:— அந்தச் சிறுவனை ஆபத்பாந்தவன் அனதரட்சகன என்றுஎவரைச்சொல்லுகின்ருர்களோ அந்த ஆண்டவன் தன் இருப்பிடத்திற்கு அழைத்துப் பக்கத்திலே வைத்துக்கொண்டாரா! அல்ல! பின்? அவனுடைய வளமான வாழ்வு வரண்டது. அவனுடைய வாழ்வு ஆண்டவனுடைய தேரில் சிக்கிச் சீரழிந்தது'—சின்னபின்னமாக்கப்பட்டது! அவ்வளவுதான்! இந்த இருபதாம் நூற்ருண்டில்—அணுகுண்டு யுகத்தில் இப்படியும் ஒரு விளையாட்டுத் திருவிழாவா?

✻

அநாகரிகம்!

ர் 18] ஆண்டுச் சந்தா ரூ. 8. (26—7—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 2

"எங்களைவிட நாகரிகத்தில் சிறந்தவர்கள் இந்த உலகில் வேறு யாரும் கிடையாது" என்று, இன்று தித்தாப்புப் பேசிக் கொள்ளும் அமெரிக்கர், ஆபிரகாம் இலிங்கன் காலம் வரையில் மிக மிகக் கீழ் நிலையில்—அநாகரிகத்தின் உச்சியில் இருந்தவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆபிரகாம் இலிங்கன் காலத்திற்கு முன்—நாகரிகம் என்ருல் என்ன, அப்படியுமொன்று இவ்வுலகில் இருக்கின்றதா என வியப்போடு வினவெழுப்பியவர்கள் இந்த அமெரிக்கர்கள் என்பதையும் நாடு நன்கறியும்.

ஆபிரகாம் இலிங்கன் காலத்தில்தான் நாகரிகத்தின் மேன்மையை—மக்களினத்தின் சமத்துவத்தை ஓரளவுக்கு அவர்களால் உணர முடிந்தது. என்ற போதிலும், அவர்களிடம் குடிகொண்டிருந்த அநாகரிகப் போக்கு அறவே மாறிவிட மறுத்து, அங்கு வாழும் நீக்கிரோக்களையும் பிற தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதப்படுபவர்களையும் கேவலமாக நடத்தி வந்தனர். ஆபிரகாம் இலிங்கனின் விடமுயற்சியும். மனித இனத்தின் கொடுமையை முற்றிலும் உணர்ந்த சிறந்த பண்பாடும் அமெரிக்கர்களை—ஓரளவுக்காவது முன்னேற்றமும் முற்போக்கும் காணவேண்டுமென்று விரும்புவர்களை, நாகரிகத்தின் மேம்பாட்டினை உணர வைத்தது. பிறகு, படிப்படியாக நாகரிகமும் பண்பாடும் அமெரிக்கர்களிடையே நிலவத் தொடங்கிற்று. ஆனாலும், அடியோடு அநாகரிகம் அகன்றுவிட்டது என்று கூறவிட முடியாது. இப்போதும்கூடச் சிற்சில வேளைகளில்—சிற்சில இடங்களில், அவர்கள் தங்கள் உண்மை வடிவத்தைக் காட்டத் தயங்குவதில்லை. அண்மையில்கூட நீக்கிரோ மாணவர்களை தங்கள் கல்லூரிகளில் ஒன்ருக உட்கார்ந்து படிக்க ஒப்பவில்லை. பின்னர் அது, வழக்குமன்றம் வரை சென்று நீக்கிரோ மாணவர்கள் நீதிபெற்றனர் என்ற செய்தி வந்தது.

இப்பொழுது வந்திருக்கும் ஒரு செய்தியைப்பார்க்கும்போது, அமெரிக்க மக்களின் அநாகரிகப் போக்கு, ஒரு தொத்து நோயாகவே இருந்து வருவது தெரிகிறது.

அண்மையில் இங்கிருந்துசென்ற தோழர் ஷம்ஷேர்சிங் என்பவரும் அவருடன் சென்ற வேறு நால்வரும் வாஷிங்டனிலுள்ள ஒரு குளிக்குமிடத்திற்குச் சென்றனர். அங்கு நின்ற காவற்காரன் அவர்களை அந்தக் குளத்தில் குளிக்கக்கூடாதென்று கூறித் துரத்தியிருக்கிருன். காரணம், அவர்கள் அமெரிக்கர் அல்லாதவர்கள் என்பதுதான்.

"எங்கள் தோலின் நிறத்தின் காரணமாக எங்களை உள்ளே அனுமதிக்க மறுத்தனர் என்பதில் ஐயமில்லை"

என்று தோழர் ஷம்ஷேர்சிங் அவர்களே மனமுடைந்து கூறுகிருர் என்ருல், அந்த குளக் காவற்காரன், அவர்களை எவ்வளவு கொடுமையாக நடத்தியிருப்பான் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

தோழர் ஷம்ஷேர்சிங் என்பவர், இங்கிருந்து பிழைப்பிற்காகச் சென்ற ஒரு முன்பின் தெரியாத ஆசாமியல்ல. சர்வதேசப்பருத்தி ஆலோசனைக் கமிட்டியின் இந்தியப் பிரதி நிதியாக உத்தியோக முறையில் சென்றவர் என்பதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிருேம்.

உத்தியோக முறையில் அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட இவருக்கே இந்தக்கதி என்ருல், மற்றும், இங்கிருந்து செல்பவர்களை நடத்தும் முறை எப்படியிருக்கும் என்பதை இங்கு விவரிக்க வேண்டியதில்லை.

இந்நாட்டின் பிரதமர் நேரு அமெரிக்காவுக்குப் போகிருர் என்ருல், அவருக்கு அமெரிக்கத் தலைவர் தனி விமானம் அனுப்பி அவரை வரவேற்று மரியாதை செய்கிருர்.

ஆனல், அவரால்—அவரது அனுமதியோடு—அரசாங்கச் சார்பில் அனுப்பப்படும் ஒரு பிரதிநிதியை அங்குள்ள குளத்தில் குளிக்கக்கூட அனுமதி மறுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட விந்தையும் வேதனை கலந்ததுமான ஒரு நிகழ்ச்சியை நாகரிகம் வாய்ந்த இந்த இருபதாம் நூற்ருண்டிலும் காண நேரிடுகிறதே என்பதை எண்ணும் போதுதான், பழைமையின்பிடி நாகரிகம் வாய்ந்தவர்களைக்கூட எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்கிறது என்பதை உணர முடிகிறது. ஆளைப் பொறுத்துத்தான் நாகரிக முறைகூட அமுலாக்கப்படுகிறதென்பது இந்நிகழ்ச்சியால் நன்கு புலனுகிறது. இதனை நாகரிகம் என்று அழைப்பதைவிட அநாகரிகமென்று கூறுவதே மிகவும் பொருத்தமாகும். ✽

மங்கையரும் திருமணமும்

இந்த இருபதாம் நூற்றாண்டில் பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளால், மாதர் முன்னேற்றம் என்ற பெயரில் எத்தனை எத்தனையோ வேடிக்கைக் காட்சிகளைக் காண்கின்றோம்.

கணவனின் குறட்டை ஒலி, காதைத் துளைக்கின்றது என்று காரணங் காட்டி மணமுடித்த இரண்டு நாட்களுக்குள் மணவிலக்கு வேண்டி வழக்கு தொடுத்திருக்கிறாள் ஓர் அமெரிக்க மாது!

மற்றொருத்தி காலையில் மண ஒப்பந்தம் செய்துகொண்டு வீடு வந்தாள்; மீண்டும் மாலையே தன் வழக்கறிஞரிடம் சென்று மணவிலக்குக்கான ஏற்பாடு செய்யச் சொன்னாள்; வழக்கறிஞர் விந்தையால் வாயைப்பிளந்தார். 'தன் கணவன் மண ஒப்பந்தத் தாளில் கையெழுத்திடும்போது தன் கையெழுத்தைவிடப் பெரிய அளவில் கையெழுத்திட்டதே தனக்குப் பிடிக்கவில்லை' என்று காரணம் கூறியிருக்கிறாள், அந்த வீராங்கனை!

ஆனால், இப்படியெல்லாம் இறுமாந்து நிற்கும் பெண்ணினம் ஒரு காலத்தில், ஆண்களின் கைப் பாவையாக விளங்கியது. அப் பெண்டிர், சமுதாயத்தில் மனிதர்களாகவே வைத்து எண்ணப்படாத ஒரு காலமும் இருந்தது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில்—காதல் உணர்வின் பெருமை தலைதூக்காத அந்தக் காலத்தில்—பெண்ணைத் தரங்குறைந்த பொருளாகத்தான் ஆண் மகன் கருதினான். நாகரிகம் பரவாத காலத்தில் உலகத்தின் பல பகுதிகளில் இருந்த பெண்களின் உண்மை நிலை பற்றி மிகமிக விரிவாக ஒரு நூல் எழுதியிருக்கிறார் 'முல்லெர்—லையர்' என்னும் அறிஞர்.

1. அக்கால மனிதன் பெண்களிடம் 'கற்பு', 'உரிமை' என்ற சொற்களுக்குப் பொருள் தேடிப் பார்க்கவில்லை.

2. விருந்தினர் வந்தால் அவர்களின் வயிற்றுக்கு இறைச்சியையும் காய்கனிகளையும் படைத்தான்; அவர்களின் உடற் பசிக்குத் தன் மனைவியைக் காணிக்கையாக்கினான்.

3. தன் ஆற்றலைவெளிப்படுத்துவதுபோல், வேலையாட்கள் என்ற முறையில் எத்தனையோ பெண்களைத் தன் குடிலில் அடைத்து வைத்தான்.

4. அப் பெண்கள் தன் கொள்கைக்கு ஒத்துவராவிட்டால், அவர்களை உடனே விரட்டியடித்துவிடுவான்; இன்றேல் மாற்றானிடம் மாற்றிக்கொள்வான்.

5. அன்று நடைபெற்ற வாணிகத்தில் பண்ட மாற்றுப் பொருளாகப் பல இடங்களில் நாணயங்களும் தானியங்களும் பயன்படவில்லை; பெண்கள் பயன்படுத்தப் பட்டார்கள்.

கா. வேழவேந்தன்

ஒரு காலத்தில் உலகின் பல பகுதிகளில் நிலவியிருந்த இந்த முறைகள் நெடுங்காலம்வரை மத்தியக் கிழக்கு ஆப்பிரிக்க மக்களிடம் நிலைத்திருந்ததாம்!

இக்கருத்தையே வலியுறுத்தி 'புச்னர்' என்பாரும், "அக்கால மனிதன் தான் சேமித்துவைக்கும் ஒரு மூலதனமாகத்தான் மனைவியைக் கருதினான்; அம்மூலதனத்திற்கு வட்டி வேண்டாமா? அந்த வட்டிதான் அவனுக்குப் பிறக்கும் குழந்தைகள்" என்று கூறியிருக்கிறார்!

ஆனால் நிலைமை அப்படியே செல்லவில்லை; காலம் மாறியது. மரப் பொந்துகள் மாளிகைகளாயின; சிற்றூர்கள் சிங்கார நகரங்களாயின. சமுதாயத்தில் பெருத்த மாறுதல்கள் இடம் பெறத் தொடங்கின.

சொல்வலன் டெமாஸ்தனீசு போன்றோர் ஓரளவு பெண்களின் உயர்வை எடுத்துக் கூறினார்கள்; இருந்தாலும் அவர்களிடையே சில பாகுபாடுகளையும் இவர்கள் கண்டார்கள்.

"நமக்கு இன்ப மளிக்க விலை மகளிர் இருக்கிறார்கள்; நமக்கு வேண்டிய பணி புரிய வேலைக்காரிகள் இருக்கிறார்கள்; நாம் விரும்பும் குழந்தைகளைப் பெற்றுத்தர விட்டரசிகள் இருக்கிறார்கள்" என்ற கொள்கை தொடக்ககால ஏதன்சில் ஆண்களிடம் நிலவி நின்றன.

குடும்பப் பெண்களுக்கும் குழந்தைகளைப் பெற்றால் தான் மதிப்புக் கொடுக்கப்பட்டது; இல்லையேல் காலொடிந்த பந்தயக் குதிரைகள்போல் அவர்கள் விரட்டப்பட்டார்கள். காரணம் குழந்தைகள் தான், தம்பெற்றோரைப் பாவக் கடலிலிருந்து கரையேற்றுகின்றன என்று மதவாதிகள் கதைகட்டி விட்டார்கள்.

நாளுக்கு நாள், ஒருவனும் ஒருத்தியுமே மணந்துகொள்ளும் முறை நடைமுறைக்கு வந்தது. ஆனால் அந்த நேரத்திலும் 'நாகரிகத்தின்

(13-ம் பக்கம் பார்க்க)

"இருந்தாலும், என்ன செய்வது?"

வேலன்

மக்கள் குரலுக்கு மதிப்பளிக்காமல், நாட்டவரின் கோரிக்கைக்குச் செவிசாய்க்காமல், சர்வாதிகார முறையிலே அரசுநடத்திக்கொண்டு, அதே அரசுக்கு அப்பட்டமான ஜனநாயக அரசு என்று இலக்கணம் கூறிக்கொண்டு, இத்தகையதோர் நல்லாட்சியை எங்களைத் தவிர வேறு எவராலும் நடத்திக் காட்ட இயலாது என்று இறுமாப்புரை வழங்கிக்கொண்டு, மக்களாட்சி என்னும் மகத்தானதோர் சொல்லுக்கே மாசு விளைவித்து வருவதென்பது இந்த இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிப்பீடத்திலே கொலுவிருந்துகொண்டு 'டில்லி தர்பார்' நடத்தி வரும் காங்கிரஸ்காரர்களுக்கே உரித்தான பண்பாகும்!

அந்த டில்லி சென்றிடும்போக்கு, முறையற்றதாயிடினும், தீட்டி நீட்டும் திட்டங்கள் தகுதியற்றதானாலும், கடைப்பிடிக்கும் நடைமுறை பிழைபட்டது என்றாலும், அவையனைத்திற்கும் ஆமாம்போடும் அடிமைப் பூசாரியாக இருப்பதிலும், அப்படி இருப்பதையே ஒரு தனிப் பெரும் கவுரவம் என்றெண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்வதிலும், தனக்கு நிகர்தானே என விளங்கிடும் மாநில அரசு ஒன்று உண்டு என்றால், அது நமது மதிப்பிற்குரிய சென்னை அரசுதான் என்பதையும் நாம் அறிவோம்—நாடும் அறியும்.

இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கான தந்திரங்கள் பல செய்து, வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போன்று மெள்ள மெள்ள நுழைத்துவந்த நிலையும் இன்று மாறி, வலியே தாங்கமுடியாமல் வாய்விட்டு அலறித் துடிக்கும் போதுகூட ஒருவன் உடலிலே வலிய ஈட்டியை ஏற்றுவதைப் போல எங்கும் எதிலும் இந்தியை நுழைத்து வருகின்றனர்.

கண்ணையொத்த எங்கள் அருமை மொழியைக் கருவறுக்க — உருக்குலைக்க வேண்டுமான வழிவகைகளை நீங்கள் உருவாக்கி வருகிறீர்கள்; உகந்த செய்கையல்ல இது; உடனே திருந்திடுவீர் என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே நாம் முழங்கியும், தீர்மானங்கள் நிறைவேற்றிக் கண்டித்துங்கூட இந்தித் திணித்தலைத் தணித்துக்கொள்ளவோ திரும்பப் பெறவோ மதி பெறாமல், மாறாக அதிவேகமாகத் திணித்து நீதியைக் கொன்று வருகின்றனர் டில்லி அரசினர்.

இது குறித்துக்கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம், வடவர்கள் பிறரை அடிமைப்படுத்தி அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற ஆதிக்கப் பண்பு பெற்றவர்கள் என்பதும், அவர்தம் தலைவராம் நேரு பண்டிதர் ஆணவத்தினை அணைத்துக்கொள்பவர் என்பதும் வெட்ட வெளிச்சமான உண்மை. ஆனால் நம்முடைய அநுதாபத்திற்கும் ஆத்திரத்திற்கும் இலக்காகிடும் நிலையில் இருந்து வரும் தமிழ்நாட்டு அமைச்சர்களைப் பற்றித்தான் நாம் ஆச்சரியப்பட வேண்டி இருக்கிறது.

இல்லக்கிழத்தியைத் தெருவிற்கு ஓட்டிவிட்டு, இன்பத்தைப் பொருளுக்கு விற்கும் ஒருவனை இல்லத்திற்கழைத்து வரும் இழிநிலைக்கும், தமிழைச் சீரழிக்க வரும் இந்திக்குச் செல்வாக்கு அளித்திடும் நமது அமைச்சர்களின் போக்கிற்கும் இடையே இம்மியளவும் இடைவெளி இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. செந்நெல் மணி வயற்பரப்பில் காட்டெருமை நுழைவதுபோல, கன்னல்மொழித் தமிழ்ச் சோலையில் இந்தி எனும் மந்தி நுழைந்து இன்னல் படுத்தி வருவதைப் பார்த்துங்கூட நமது மந்திரிகளின் சிந்தையணுக்கள் சிறிதளவும் நொந்துகொண்டதாகத் தெரியவில்லை. இது பச்சைத் துரோகிகளின் செய்கையல்லவா என்று நாம் வினா எழுப்பிடும்போது, அமைச்சர்கள் வெந்த புண்ணிலே வேலைச் செருகுவதுபோல மேலும் வேதனை தரும் சேதியை விடையாக அளிக்கின்றனர்.

தமிழ்மொழியில் உள்ள இனிமையும் இலக்கண இலக்கிய வளமும் இந்திமொழியில் இல்லை என்பது உண்மைதான்: இருந்தாலும் என்ன செய்வது? தொலைக் கற்களில் எழுதியிருக்கும் இந்தி எங்களுக்கும் புரியவில்லைத்தான். இருந்தாலும் என்ன செய்வது?" இவைகள்தாம் அமைச்சர்கள் அளித்திடும் விடைகள். அவர்களின் விடையிலே 'இருந்தாலும் என்ன செய்வது' என்ற அவலம் நிறைந்த வினாவும் தலைகாட்டுகிறது. இங்குதான் சிந்திக்கவேண்டியதும் இருக்கிறது. 'என்ன செய்வது, என்ன செய்வது' என்ற கேள்வியை அச்சத்தோடு வாய்க்குள் முணுமுணுத்துக்கொள்ளாமல், அச்சம் தவிர்த்து, வாய் திறந்து முழக்கமிட்டுக் கேட்டால், அவ்வினாவிற்குத் திராவிடம் தனியரசு பெறவேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலையாய இலட்சியமே தகுதியான விடையாக அமையும். திராவிடம் தனியரசு பெற்றுவிட்டால் அதில் எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும், என்ன செய்வது என்ற கவலையை விடுத்து எதையும் தாமே செய்து கொள்ளும் நிலை ஏற்படும். இப்படி விளக்கிக் காட்டியுங்கூட நமது அமைச்சர்கள், விடையாக அமையும் நம் இலட்சியத்திற்கு தடையான வார்த்தையை வெளியிட்டு வருகிறார்கள். துள்ளிக்கொள்ளத் தயங்குகிறார்கள். முனிவு கொள்வார் நேருபிரான் என்று முணுமுணுத்துக் கொள்வதோடு மட்டும் நிறுத்திக்கொள்கிறார்கள்.

இதே நிலை நீடித்துக்கொண்டிருத்தலைக் காலம் இனி ஒருக்காலும் பொறுத்துக்கொள்ளாது என்ற உண்மையை அண்மையில் நடந்து

முடிந்த சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் அமைச்சர்களுக்கு மிக அழகாக எடுத்துக்காட்டி இருக்கிறது. இருந்தும்கூட அமைச்சர்கள் திருந்தும் வகை பெறாமல், தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்ற முறையில் பிடிவாதம் காட்டி வருகிறார்கள்—இந்திக்கு முதலிடம் அளித்து வருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம், நினைவு, சொல், செயல் என்னும் மூன்று நிலையிலும் இம்மியும் நெகிழ்வு இல்லாமல் ஒன்றுக்கொன்று சரியான தொடர்புடைய முறையிலேயே எந்த ஒரு காரியத்தையும் செய்துமுடிக்கும் பொறுப்புள்ள ஓர் மக்கள் இயக்கமாகும். ஒன்றைத் திரச் சிந்தித்து முடிவு கண்டு திட்டவட்டமாத எடுத்துரைத்து அதைத் திறம்படப் பணியாற்றி முடித்தலைத் தன் பிறப்பியல்பாகக் கொண்டது. மகிழ்வு கொள்ளும் வகையில் முன்னேற்றம் அடைந்திருக்கும் இந்நிலைக்கு அவ்வியல்புதான் காரணம் என்பது வெள்ளிடை மலை. ஆள்வோரால் நீதி கொல்லப்படுவதாகவோ, அதனால் சமுகம் பாதிக்கப்படுவதாகவோ உள்ள நிலை காணும்போது, தகாத செயல் அது, திருந்திடுவீர் என நல்லுரை வழங்கி, அதில் பயனில்லாமற் போனால், எச்சரிக்கை விடுத்து, அதிலேயும் பலன் காணாது போனால், அறப்போர் துவங்கி, அடக்குமுறை எது வரினும் அதைத் தாங்கி நீதியைக் காப்பாற்றத் தவறாதது கழகம் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆச்சாரியார் ஆட்சியில் புதிய கல்வித் திட்டம் வந்தபோது அத்திட்டம் அநீதி பயப்பது, ஆகவே அது அறவே நீக்கப்படுதல் வேண்டும் என்று கிளிப்பிள்ளைக்குச் சொல்லுவதுபோல் நாம் எடுத்துச் சொன்னோம். காது கொடுத்தாரில்லை ஆச்சாரியார். எச்சரிக்கை விடுத்தோம், எதற்கும் அஞ்சேன் என்று பிடிவாதம் செய்தார். இறுதியில் நாம் அறப்போர் துவக்கவேண்டியதாயிற்று. அடக்குமுறை அத்துமீறி நடத்தப்பட்டது. ஐயாயிரத்திற்கு மேற்பட்டோரும் தலைவர்களும் சிறையிலடைக்கப்பட்டனர். கண்ணிழந்தோர் எண்ணற்றவர், முடமாக்கப்பட்டோர் ஏராளம், துப்பாக்கியால் சுடப்பட்டுப் பிணமானவர் அறுவர். என்றாலும் அறப்போர் வென்றது; ஆணவம் சுக்கு நூறானது. அதுமட்டுமா? ஆச்சாரியார் தம் பதவியையே துறந்துவிடவேண்டிய பரிதாபமும் நேரிட்டுவிட்டது. இந்நிகழ்ச்சி நிகழ்ந்த பின்பு நாம் சரியாக ஆறு ஆண்டுகளைத்தான் தாண்டி இருக்கிறோம். மறக்க முடியாத நிகழ்ச்சி; நாமும் மறந்துவிடவில்லை என்றாலும், இன்று நாம் அதை குறிப்பாக நினைவுபடுத்திக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆம், அந்த அளவுக்குத்தான் நமது அமைச்சரவை வழிகோலி வைத்திருக்கிறது.

கலிங்கம் பிணக்காடாக மாறியதைக் கண்டு கண்ணீர் வடித்துத் தன் தவறையுணர்ந்து—புத்தரின் பொன்மொழிகளைப் பின்பற்றிப் புனிதனாக மாறினான் அசோகன். தன் முதற் போரையே முடிவான போராக்கிக் கொண்டான். அவன் மற்றுமொரு 'கலிங்கம்' காண விரும்பவில்லை. ஆனால், அவன் சக்கரத்தை நீதிச் சின்னமாகப் பொறித்துக் கொடி பறக்க விட்டுக் கொண்டிருக்கும் காங்கிரசார் 1953ல் ஜூலைப் பதினைந்து கண்ட பின்னரும் அறிவுக்கண் திறந்து கொள்ள முடியாதவர்களாய், அநீதியின் திரு உருவங்களாய் அடுத்தும் ஓர் ஜூலைப் பதினைந்தைக் காண விரும்புகிறார்கள். ஆமாம், நேருவை நெட்டிக் கேட்கும் நெஞ்சுரம் இல்லாதவர்களாய்— மன வலிமையற்றவர்களாய் மாத்தமிழைச் சிதைக்க வந்திருக்கும் இந்தியை 'இருந்தாலும் என்னசெய்வது' என்று அவலம் உதிர்த்துக்கொண்டு, அரியணையிலே அமர்த்துவதற்கு இடமளிக்கும் அமைச்சர்களின் போக்கானது அடுத்தும் ஒரு மாபெரும் ஜூலைப் பதினைந்தைக் காண விரும்புவதாகத்தான் தெரிகிறது. அதற்கொன்றும் தயங்கப்போவதில்லை நாம்.

தமிழகத்து அமைச்சர்களால் தமிழ் காத்திட முடியாது என்ற நிலை முடிவாகவே அமைந்துவிட்டால், நாமும் அவர்களைப்போல் ஊமைகளாக இருக்கப் போவதில்லை.

பெற்று வளர்த்விட்டாள் தாய்' பெரியோனாக்கிவிட்டான் தந்தை— வேல்வடித்துக் கொடுத்துவிட்டான் கொல்லன். இந்த மூவருடைய கடன்களும் முடிவுற்ற பின்னால், இனி எஞ்சியிருப்பது யார் கடன். பிறந்து வளர்ந்து பெரியவனாகி, வேலேந்தி நிற்கும் மகன் கடன்தான். போர் முரசம் அறையப்பட்டால், அவ்வொலி தன்செவியில்பட்டால், தினவெடுத்த தோள்களுக்குத் தீனி கிடைத்துவிட்டது என்று, வேலை ஏந்தி, வேழம் ஏறி, வீரர்களின் அணிவகுப்பிலே முதலிடம் பிடித்து, மார்தட்டி ஆர்ப்பரித்துப் போர்முனை புகுந்து மாற்றானை மண்டியிடச் செய்தல்வேண்டும், அன்றி, மார்பில் புண்பட்டு, மண்மாதாவின் மடியிலே படுத்து மரணத்தின் பிடியிலே தவழவேண்டும். உண்மை வீரனுக்கு இவை இரண்டுமே வெற்றிகள் — வீர விருதுகள். பெற்று வளர்த்தவர்களுக்கு அவன் பெருமையோடு வழங்கும் காணிக்கை — முடிக்க வேண்டிய கடன். வீரனுக்கு வெற்றியிலும் புகழ்—வீர மரணத்திலும் புகழ். வேழத்தின் விலை, இருந்தாலும் ஆயிரம்பொன், இறந்தாலும் ஆயிரம பொன். இப்படி நாடு காத்தலைத் தன் தலையாய கடனாகக்கொண்டு வீரத்தோடு வாழ்ந்தவர்கள் நம் பழந்தமிழர் என்பதை வரலாறு கூறுகிறது. நாமும் அவர்கள் வழி நிற்போம். உயிர் நமக்கு வெல்லமல்ல, உன்னத நம் மொழிதான் நமக்கு உயிரினும் மேம்பட்டது. தீதுமொழியாம் இந்திதனைத் தென்புலத்தின் எல்லைக்கப்பால் துரத்தியடித்துத் தீந்தமிழாம் நந்தமிழைத் தழைக்க வைக்க மாபெரும் அறப்போர் துவக்குவோம். அதுபோது நமது அமைச்சர்கள் அடக்குமுறை மூலம் தங்களது சூரத்தனத்தைக் காட்டி ஜூலைப் பதினைந்து காண்பதாக இருந்தாலும் சரி, அன்றி, அசோகன் கண்ட கலிங்கமே காண்பதாக இருந்தாலும் சரி, காணட்டும். கவலைகொள்ளப் போவதில்லை.

'இருந்தாலும், என்ன செய்வது' என்று இயம்பும் நிலையில் ஒரு அமைச்சரவை இருக்கலாமா? தேவையா? எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

ஆண்டவனுக்கும் ஆள் பஞ்சம்!!

—[பா. கரிகாலன்]—

"ஆண்டவன் அமர்ந்துள்ள அலங்காரத் தேரினை இழுத்துச் செல்வதற்குப் போதிய ஆட்களின் உதவி இல்லை"—

"என்ன...என்ன? வியப்பாக உள்ளதே! எல்லாம் வல்ல சர்வேஸ்வரனை, எம்பெருமானை இழுப்பதற்கா ஆட்கள் போதவில்லை—கிடைக்கவில்லை! யார் கூறியது இப்படி...எவனோ கடைந்தெடுத்த அறிவிலியாகத்தான் இருக்க வேண்டும்" என்று பக்தர்கள் பதறுவர் இக்கூற்றைக் கேட்டு.

"என்னங்காணும் அநியாயம்! எம்பிரான் எழுந்தருளியிருக்கும் தேரை இழுப்பதற்கு ஆளுக்கு என்ன பஞ்சமாவா போச்சு! அதுதான் நம்ப சர்க்கார் 'கர்ப்பத் தடை'ன்னு ஒண்ணைக் கொண்டாந்ததுக்கப்புறம் பிள்ளை இல்லாததுககூடப் பெத்துப்போட ஆரம்பிச்சுட்டுதுகளே! எவன் இப்படிச் சொன்னான்' என்று ஒருசில தொந்திகளும், துந்துபிகளும் குதிக்கத் தொடங்கும் இக்கூற்றினால்.

ஒரு சிலரின் முகங்கள் கேள்விக் குறியாகலாம்; அதில் வியப்பும் கூட வட்டமிடலாம்.

இக்கூற்றைத் திருவாய் மலர்ந்தருளியவர் வேறுயாருமல்ல; சென்னை மாநில அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்தான்.

எங்கே?......

மதுரையில் செய்தியாளர்களிடம்; அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் முறையில் இதைக் கூறினார்.

எப்போது?

ஜூன் திங்கள் 15-ம் நாளன்று.

"ஓகோ!" — சிலரின் குரல் கம்மும்.

"என்ன அவரா?"—வியப்பிலே தோய்ந்துவெளிவரும்சிலரின்குரல்.

"ஏன் இப்படிச் சொன்னார்?"—விடைதெரியாமல் சிலரின் குரல் தத்தளிக்கும்.

வேறு எதற்காகவுமல்ல; திருவாரூரிலே ஆண்டவனை நகர்வலம் வரச்செய்வதற்கென்றே ஒரு தேர் உள்ளது. "அந்த ஊரிலே சரியான சாலை வசதிகள் இல்லை; மேலும் அத்தேரை இழுப்பதற்குப்போதிய ஆட்களின் உதவியும் இல்லை. ஆகவே அத்தேரை ஆண்டுக்கொருமுறை இழுத்து வருவது தடைப்பட்டுவிடுகிறது"—அமைச்சர் அங்கலாய்க்கிறார்.

அதுமட்டுமா? "அப்படியே தேரை இழுத்துவந்தாலும் மீண்டும் இருப்பிடம் வந்து சேர்வதற்குப் பல நாட்களாகிவிடுகின்றன"—இதுதான் இப்போது அமைச்சரின் பெருங்குறை—கவலை.

'தேர் வந்துசேர நாளாகிவிடுகின்றதே' என்பதுதான் நாடாளும் அமைச்சரின் தீராத கவலை.

'ஆண்டவன் ஆலயம் வந்தடையக் காலம் கடந்துவிடுகின்றதே' என்பதுதான் ஊராளும் மந்திரியின் ஓயாத சஞ்சலம்.

'பக்தர்கள் மனம் புண்படும்படியான செயல் அல்லவா இது! இது நீடிக்கலாமா?' என்பதுதான் அமைச்சரின் மாறாத சோகம்.

ஆகவே பக்தர்களின் மனப் புண்ணை நீக்க ஒருமுடிவெடுத்துவிட்டார் மந்திரி.

என்ன முடிவு அது?

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் பயன்படுத்தப்படும் பலம் வாய்ந்த இயந்திரங்களின் உதவியால் திருவாரூர்த் தேரை ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலத்தில் இழுத்துவர முடியுமா என்பதுபற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காகச் செர்மன் நாட்டிலிருந்து ஒரு நிபுணர் வருவார்" — ஆண்டவனின் அடியார்களின் அகங்குளிர அமைச்சர் அளித்த உறுதிமொழிதான் இது!

எல்லாம் வல்ல சர்வேஸ்வரனை, கேவலம்! 'மனிதனின் மூளை தந்த பரிசாகிய இயந்திரம்' இழுக்கப் போகிறதாம். வியப்பிலும் பெருவியப்பு மேலிடுகிறது; இதற்கு அடியார்கள் அளிக்கும் பதில் என்னவோ?

"அப்படியென்றால், மதுரை சிவில்லிப்புத்தூர் காஞ்சிபுரம் போன்ற நகரங்களில் உள்ள தேர்களையும் இழுக்க இயந்திரங்கள் பயன்படுத்தப்படுமா?" — இது செய்தியாளர்களின் கேள்வி.

"முதலில் திருவாரூர்த் தேர் இழுப்பதுபற்றிய ஆராய்ச்சிதான் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது"—இது நாடாளும் அமைச்சரின் பதில்.

பார்த்தீர்களா! அரசாங்கத்தின் கவனம் எந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதென்பதை!

'தேர் இருப்பது எப்படி?'—என் பதில்தான்..

கொட்டும் வெயில்தான் அவனுக்கு வீசும் தென்றல்; கொடிய ஓசையுடன் இடிக்கும் இடி அவனுக்கு இன்னிசைக்கீதம்; பெய்யும் மழை அவனுக்கு அழகான அருவி நீர்த்துளி; வெயிலில் காய்கிறான்; அவன் வற்றவில்லை; மழையில் நனைகிறான்; ஆனால் அவன் தென்னம் பாளையல்ல; சாலையோரங்கள் அவனுக்குச் சோலையோரங்கள்; அதுவும், ஒன்றா? இரண்டா? இல்லை;இல்லை;பலஆயிரம்குடும்பங்கள். அத்தனையும் இந்நாட்டு மன்னர்கள்தான்! வேறுயாருமல்ல... அவர்களின் நிலை உயர என்ன செய்யலாம் — என்பதல்ல இப்போது அரசாங்கத்தின் கவனம்.

ஏன் ஓயாமல் உழைப்பவன் உணவின்றி வாழ்கிறான்? ஏன் பிஞ்சு நெஞ்சங்களுக்குக் கல்வி புகட்டும் ஆசிரியன் கஞ்சிக்கு வழியின்றிப் பஞ்சையாக, பராரியாக வாழ்கிறான்? ஏன் குவலயத்திற்கு உணவளிக்கும் விவசாயி தனக்குணவின்றி அவதியுறுகிறான்?—என்பதிலல்ல இப்போது அரசாங்கம் கவனம் செலுத்துவது.

பின் எதில்?

'தேர் இழுப்பது எப்படி?'—இதில்தான் அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது.

ஆண்டவனின் அடியார்களே! நாட்டின் நிலை உயரப்பாடுபடும் நாங்கள் கேட்கிறோம்!

இதுதான் நாடாள்வோர் செய்ய வேண்டிய முக்கியமான கடமையா?

இதுதான் மக்களுக்குச் செய்கின்ற மகத்தான தொண்டா?

இதுதான் இன்றைய நிலையில் மக்களுக்குச் செய்யவேண்டிய அவசரமான, அவசியமான செயலா?

ஆண்டவன் தேரை இழுக்க ஆட் பஞ்சம் ஏற்பட்டதன் அடிப்படைக் காரணத்தை ஆராய நேரமும் மனமும் இல்லாத அமைச்சர். அதனை இழுக்க பொறியினைத் தேடுகிறார்! அதில் செர்மன் நாட்டிலிருந்து நிபுணரை வரவழைக்க ஏற்பாடு செய்கிறார் என்பதை எண்ணிப்பார்க்கும்போது, நம்முடைய — அறிவியக்கத்தாருடைய பணி வீண்போகவில்லை—வெற்றி பெற்றுவருகிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும் என்பதை உணர்த்துகிறது.

✽

இரு பிணங்கள்!

தென்னவன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

"அவள் பெயர் செல்லி! தெரியுமா அல்லி''

"செல்லியா? நானு நீங்கள் வருணித்த பெண்?'' இது நடக்கக் கூடியதா எசமான்?''

"இந்தா பார் செல்லி! இனி எசமான் அப்படி இப்படி என அழைத்தால் எனக்குக்கடும்கோபம்வரும்!'' என்று சொல்லி மெதுவாக அவள் கன்னத்தில் தட்டினேன்.

"ஐயோ என் கன்னம்! பின் எப்படி அழைப்பதாம்?''

"அத்தான் என்று, தித்திப்புச் சொல் தந்துஅழைக்கக்கூடாதா?''

"அத்தான்...!''

"செல்லி...!''

"........''

"நான் ஏழை. அதுவும் கீழ்ச் சாதிக்காரி. நீங்கள் பணக்காரர். உயர்ந்த சாதிக்காரர். இந்த நிலையில் நீங்கள் எண்ணும் எண்ணம் நிறைவேறுமா? இருளும் ஒளியும் இணைய முடியுமா அத்தான்?''

"செல்லி! 'அத்தான்' என நீ அழைக்கும் கற்கண்டு மொழி எத்தனை தித்திப்பாய் இருக்கிறது தெரியுமா?'' செல்லி! இன்னும் நீ என்னைப்பற்றிப் புரிந்துகொள்ளவில்லை. நான் சார்ந்திருக்கின்ற கழகத்தின் கொள்கை என்ன தெரியுமா?

நாட்டில் நிலவும் சாதித் திமிர் ஒழிய — "எல்லோரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்'' என்ற உயர்ந்த கொள்கை நாட்டிலே தவழ, கீழ்சாதி மேல்ச்சாதி என்ற வேறுபாடு இன்றி—ஒருவர் இன்னொரு சாதியில் பெண்ணோ மாப்பிள்ளையோ எடுத்து, கலப்பு மணம் செய்யவேண்டும் என்பது சமுகத்தைப் பற்றிய கொள்கை.

அடுத்து, பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில், மாப்பிள்ளை பணக்காரராய் இருந்தால் ஏழை வீட்டில் பெண் எடுக்கவேண்டும். பெண் பணக்காரியாக இருந்தால் ஏழை மாப்பிள்ளையாக இருத்தல் வேண்டும். அவ்வாறு திருமண ஏற்பாடு செய்து, வரதட்சிணைக் கொடுமையின்றி, இரு குடும்பங்கட்கிடையேயும் பொருளாதார சமத்துவம் உண்டாக வழிசெய்ய வேண்டும் என்பது பொருளாதாரக் கொள்கை.

இத்தகைய எங்கள் கட்சியின் முன்னேற்றக் கொள்கையை நான் நிறைவேற்றிக்காட்டிப் பெருமைப்பட வேண்டாமா? செல்லி.''

"உங்கள் எண்ணம் அதுவானல் நான் தடுக்கமாட்டேன் அத்தான்''

●

நாட்கள் பல சென்றன. ஒரு நாள் ஐயர் வந்திருந்தார் எங்கள் வீட்டிற்கு. நான் செல்லியின் மூலம் செய்தியைத் தெரிந்துகொண்டேன். எனக்கும் செல்லம்மாளுக் கும் திருமணம் செய்ய நாள் குறித்திருந்தார்கள்—அன்று.

எனக்கு ஒன்றும் ஓடவில்லை. என்ன செய்வதென்றும் விளங்கவில்லை. திண்டாடினேன். இதை யாரிடம், எப்படிக்கூறி மறுப்பேன்?

செல்லியைப் பார்த்தேன். தினமும் என்னைக் கண்டால் மெல்ல நகைக்கும் இதழோரப் புன்னகையைக்கூடக் காணவில்லை — அவளிடம். அவள் முகம் மங்கிய நிலவு போல் இருந்தது. அவள் செய்த ஒவ்வொரு செயலும் தப்புள்ளனவாகவே இருந்தது. கண் கலங்கி, வாட்டமுற்றிருந்தாள். என் உள்ளத்து வேதனையைப்போல்தானே அவளது உள்ளமும் இருக்கும்.

மறுநாள் என் தந்தை காலையில் பூசை அறையில் இருந்து, ஆண்டவனுக்கு அறிக்கை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். வேலைக்கு வந்த செல்லி நேற்றிலிருந்து அதிக வாட்டத்துடன் காணப்பட்டாள்.

காலையுணவுபடைக்கும் பொழுது என் இலையில் இரு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. நான் திடுக்கிட்டேன். "ஏன் அழுகின்றாய்'' என மெதுவாகக் கேட்டேன்.

"என்னங்க! எங்க வீட்டில், நேற்று என் மச்சான் ரெளடி மாடசாமி என்னைப் பெண் கேட்டு வந்திருக்கின்றான். நாளைக்கே பரிசம் போடணும்னு துடியாய்த் துடிக்கின்றான். இங்கே உங்களுக்கும் செல்லம்மாள் அம்மாளுக்கும் கலியாணம் நடத்த நாள் குறித்துவிட்டார்கள். ஐயோ! நாம் முன்பு பேசிக்கொண்ட இன்பப் பேச்சுக்களும், அதன் பின்னர் நான் நாடோறும் கட்டிய மனக்கோட்டைகளும், கண்ட இன்பக் கனவுகளும், வெறுங் கானல் நீராகவே மாறிவிடுமா? இன்றுள்ள நிலையைப் பார்க்கும் பொழுது, கண்டிப்பாய் நாம் இருவரும் பிரிக்கப்பட்டு விடுவோம் எனத் திட்டமாகத் தெரிகின்றது.'' எனக் கூறிக்கொண்டு அழுதாள். என் சிந்தையும் கலங்கியது; நானும் அழுதேன்.

ஒருவரை ஒருவர் அறிந்த இரு உள்ளங்களை — ஒன்றுபட்ட இரு உள்ளங்களை — பிரித்துவிடுவதற்கான முயற்சிகள் இருமுனைகளிலும் நடக்கின்றதே என எண்ணிய பொழுது என் உள்ளம் மிகவும் வருந்தியது.

இனி நான் சும்மா இருக்க மனமின்றி ஒருவாறு உறுதியை வரவழைத்துக்கொண்டு, என் அப்பாவிடம் சென்றேன்.

"அப்பா! எனக்கு இப்பொழுது திருமணம் வேண்டாம்'' என்றேன்.

"டேய்! உனக்குப் புத்திகெட்டுப் போயிட்டுதடா? எந்த மடையனாவது கல்யாணம் வேண்டாம்னு சொல்வானடா? இப்போ ஏன் கல்யாணம் வேணும்னு சொல்றே? '

"வ...ந்...து, இப்போஎன்னப்பா அவசரம்? இன்னும் கொஞ்ச நாள் போனல் நல்லதுன்னு நினைக்கிறேன்—அப்பா!''

"அதெல்லாம் எனக்குத் தெரியும். நீ போய் உன் வேலையைப் பாரு!''

"இல்லேப்பா! செல்லம்மாளுக்கு நல்ல இடமாப்பார்த்து முடித்த பின் எனக்குத் திருமணம் செய்ய லாம்னு சொல்லலாம்னுதான்."

"என்ன? செல்லம்மாளுக்கு வேறு இடமா? யாருடா சொன்னது, செல்லத்தை வேறு இடத்துக்குக் கட்டிக் கொடுக்கணும்னு? அவளுக்குண்ணு பிறந்த மாப்பிள்ளை நீ இருக்கும் பொழுது, வேறிடம் எதற்காகத் தேடவேண்டும்? கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு, நெய்க்கு அலைய வேண்டுமாடா? இது கிறுக்கன் செய்யும் வேலையில்லே!

"எனக்கும் அவளுக்கும் ஒத்து வராதப்பா! எனக்குக் கொஞ்சம் கூட அவளைப் பிடிக்கவில்லை. அவளும் நானும் அண்ணன் தங்கை போல் வளர்ந்துவிட்டோம். ஆகவே அவளை வேறு இடத்திலே கொடுப்பதுதான் நல்லதப்பா!"

"நான் உன் அக்காவுக்கு, செல்லத்தை உனக்கே முடித்துவைப்பதாகத்தான் அன்று உறுதி கொடுத்தேன், இப்பொழுது நீ ஏன் அவளை வேண்டாம் என்று கூறுகின்றாய்? இந்தா பாருடா! அவள்தான் உனக்கு! நீதான் அவளுக்கு! இம்முடிவை ஈசனே வந்தாலும் மாற்றமுடியாது. உனக்கு இந்தக் கல்யாணத்திலே இஷ்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நான் நடத்தியேதீருவேன். ஐயர்கூட இரண்டு ஜாதகத்துக்கும் நல்ல பொருத்தம் இருக்குதுன்னு சொல்லிவிட்டார்." என இடியாய் முழங்கினார். பேரிரைச்சல் போட்டார். என்னை அப்படியே விழுங்கி விடுவதுபோல் விழித்தார். அவரது கண்கள் கோவைப் பழம்போல் சிவந்து இருந்தன!

"அப்பா! நானும் கண்டிப்பாய் இந்தத் திருமணத்திற்கு இசைய மாட்டேன்."

"அப்படியானால் வேறு யாரைக் கட்டிக்கொள்வாய். நம் உறவில் நம் மதிப்புக்குச் சரியா வேறு யாருடா இருக்காங்க?"

"நான் செல்லியைக் கட்டிக்கொள்ள முடிவு செய்திருக்கிறேன் அப்பா! அவளும் இத்தனைநாளாக நம் வீட்டில் ஒருத்தியாக--செல்லத்தைப் போல் வளர்ந்தவள்தானே! அவளையே நான் மணம்முடித்துக் கொள்ளுகின்றேன் அப்பா!"

"அட நீசப்பயலே! என் குடும்ப உயர்வையும் குலதர்மத்தையும் கெடுக்கப்பார்க்கின்றாயேடா?—கேடுகெட்டவனே! நம் அந்தஸ்து என்ன—அவங்க அந்தஸ்து என்னடா? அவள் என்ன சாதி? நாம் என்ன சாதிடா? உண்மையான இந்துவாய் இருந்தால் இதையெல்லாம் நீ நினைப்பாயாடா?—ஆச்சாரங் கெட்டவனே! என் மானத்தையே போக்கிடுவாய் போல் தெரிகின்றதே, மானங்கெட்டவனே! கீழ்ச்சாதிப் பெண்ணைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தால் ஊர் உலகம் உன்னையும் என்னையும் மதிக்குமாடா, மதிகெட்டவனே! என்னிடம் வந்து "நான் செல்லியைக் கட்டிக்கொள்வேன்" என்று சொல்ல எவ்வளவு தைரியம் இருக்கணும்டா உனக்கு? மடையனே! உன் கொள்கைகளை உன்னுடன் வைத்துக்கொள். வீட்டுக் காரியங்களில் நுழைக்காதே!

உனக்கு இந்தக் கலியாணத்தில் இஷ்டமில்லையென்றால், இன்றைக்கே, இப்பொழுதே இந்த வீட்டைவிட்டு ஓடிவிடு! என் சொத்திலிருந்து ஒரு செல்லாக்காசுகூடக் கிடைக்காது! நான் செல்லத்தைக் கட்டிக்கொள்பவனை அழைத்துக் கொண்டுவந்து என்னுடன் வைத்துக் கொள்வேன்! போடா போ! என் முன்னே நிற்காதே! என இரைந்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், செல்லி நான்கு நாட்களாக, வேலைக்கு வரவில்லை. உடைந்து போன என் உள்ளத்திற்கு அமைதி தர யாரும் இல்லை வீட்டில். என் அப்பாவும் திருமணத்தை விரைவாக நடத்த ஏற்பாடுகள் செய்தார். நான் இருதலைக் கொள்ளி எறும்புபோல் திண்டாடினேன்—வீட்டில்.

ஐந்தாவது நாள், செல்லி மணக் கோலத்தோடு, தன் கணவனுடன, எங்கள் வீட்டில் காட்சி தந்தாள். தம்பதிகள் இருவரும் என் தந்தையின் காலில் விழுந்து வணங்கினர். கூட அவள் அம்மாவும் வந்திருந்தாள்.

இந்தக் காட்சியை என்னால் பார்த்துக்கொண்டு நிற்க முடியவில்லை. உலகம் தலைகிறாகச்சுற்றுவதுபோல் தோன்றியது எனக்கு. பைத்தியம் பிடித்தவன்போலானேன். ஓடிச் சென்று என் அறையில் கிடந்த படுக்கையில் விழுந்தேன். நெஞ்சு வலி மிக அதிகமாக இருந்தது. என்னால் அந்நேரத்தில் எதுவும் செய்யமுடியாத, உணர்ச்சியற்ற நிலையில் இருந்தேன்.

என் முன்னே செல்லி வந்து நின்றாள். அவள் அடுத்தவர் சொத்தாகிவிட்டதால், நான் தலை தாழ்த்திப் பேசாதிருந்தேன்.

அவள் ஏங்கி ஏங்கி அழுதாள். அத்தான்! என்னை மன்னித்து விடுங்கள்! என்னை மன்னித்து விடுங்கள்! நீங்களும் உங்கள் அப்பாவும் தகராறு பண்ணிய அன்று இரவு, நான் வீட்டிற்குச் சென்றதும், உங்கள் அப்பா எங்கள் வீட்டிற்கு வந்து என்னைத் திட்டினார்கள். வேலைக்கும் வரக்கூடாதெனச் சொல்லிவிட்டார்கள். அவர்களால்தான் எனக்கும் ரௌடி மாடசாமிக்கும் திருமணம் நடத்தப்பட்டது. அவர்கள்தான் மாடசாமிக்குப் பணம் கொடுத்து, என் அம்மாவையும் மிரட்டி, எங்கள் கலியாணத்தை முடித்தார்கள்.

அத்தான்! அவர்கள் செய்ததும் ஒரு வகைக்கு நன்மைதான். நான் மிகுந்த ஏழை. கீழ்ச்சாதிக்காரி. நீங்கள் பணம் படைத்தவர்கள்—உயர் குலத்தார். எனக்காக நீங்கள் உங்கள் அப்பாவையும், உறவினரையும், ஆஸ்திகளையும் வெறுத்துவிட்டு வந்தால், உலகம் உங்களை மதிக்குமா? அல்லது என்னால்தான் உங்களை ஆடம்பரமாகக் காப்பாற்ற முடியுமா? இந்தப் பழிகாரச் சமுகம் என்றுமே நல்லவர்களை வாழவிடவில்லையே! அத்தான்.

நீங்களும் என்னுடன் சேர்ந்து கூலிவேலை செய்தால்தான் நாம் அரைவயிற்றுக் கஞ்சியாவது குடிக்க முடியும். உங்கள் சுகம்தான் என் சுகமும். நீங்கள் நல்முறையுல் வாழ்ந்தால்தான் என் உள்ளம் அமைதி பெறும். நீங்கள் வருந்த என் மனம் பொறுக்குமா? நீங்கள் செல்லம்மாள் அம்மாளுடன் சுகமாக வாழ்ந்தால், அதுவே எனக்குப் போதும். நானும் முன் போல் வேலைக்காரியாகவந்து உங்களுக்கு ஊழியம் செய்வேன். அந்தப் பாக்கியமும் எனக்குக் கிடைக்கும். உங்கட்கு உரியவள் என்ற நிலையில் இல்லாவிட்டாலும், வேலைக்காரி என்ற உரிமையிலாவது உங்கட்குச் சேவை செய்யும்

பேறு கிடைக்கும் என்று கருதித்தான் இம்முடிவிற்கு வந்தேன். இல்லாவிட்டால் அன்றிரவே தற்கொலை செய்துகொண்டிருப்பேன். எப்படியும் நீங்கள் இருவரும் சுகமாக வாழவேண்டும்—அதுதான் எனது பேராசை. வருகின்றேன்—அத்தான்'' என்றாள் அழுதுகொண்டே. அவள் வடித்த கண்ணீரால் மேலாடை நனைந்திருந்தது. கன்னங்களில் கண்ணின் நீர் ஓடி உலர்ந்த அடையாளம் தெரிந்தது.

"நீ கூறிவிட்டாய் செல்வி! எனக்காக உன் வாழ்வைத் தியாகம் செய்துவிட்டதாக! ஆனால் செல்வி நீ இல்லாத என் வாழ்வு வரண்ட பாலைவனம் போன்றதாகத்தான் இருக்கும். நிலவில்லாத வானம் பொலிவிழந்து தோன்றுவது போல்தான், என் வாழ்வும் சுவையற்றதாக—செத்த வாழ்வாக இருக்கும். இனி நான் வாழ்வதும் சாவதும் ஒன்றுதான். ஒருவேளை இன்றிரவே நான் செத்தாலும் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. ஆனால் உன்னிடம் ஒன்று மட்டும் வேண்டிக்கொள்ளுகின்றேன் — நான் சாவதற்குமுன் நீ உன் கணவனுடன் சந்தோஷமாக வாழ்க்கையை நடத்து. என்னைப் பற்றிக் கவலைப்படாதே! என் நல்வாழ்விற்காக உன் வாழ்வைத் தியாகம் செய்த உன்னை என் மனமாரப் பாராட்டுகின்றேன். செல்வி! செல்லத்தை நம்பி என்னப்பாவைக் கவனியாது விட்டுவிடாதே! முன்போல் வேலைக்காரியாகவந்து உன் கடமையை என்றும்போல் தப்பாது செய்! போ செல்வி போய்விடு!"

செல்வி பதில் ஒன்றும் கூறுமல் 'அத்தான்'' என அலறிவிட்டு ஓடிவிட்டாள்.

மறுநாள் நான் காலையில் எழுந்ததும், அவள் அம்மாவின் மூலம் கேள்விப்பட்ட செய்தி, செல்வி தூக்கிட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டாள் என்பதுதான்.

என் காதல் இராணி, நேற்று எனக்காகத் தன் வாழ்வையே ஈந்த என் அன்புத் தெய்வம்—இன்று, என் பிணத்தைத் தான் பார்க்கக் கூடாது என்பதற்காக—எனக்கு முன்னதாகவே இறந்துவிட்டாள். அவள் எனக்காக இல்லாததால் நான் வாழமுடியாது என்று சொன்னேன் — நேற்று. ஆனால் அவளோ, நான் நன்றாக வாழாவிட்டால் அவளால் வாழமுடியாது என்பதைச் செயலில் காட்டிவிட்டாள் — இன்று. ஐயகோ! அவள் இறப்பு என்னால் ஈடுசெய்ய முடியாதது. என்னால் தாங்கிக்கொள்ள முடியாதது. இந்த உத்தமியைப் போல் காதல் துணையை வேறெங்கும் காண இயலாது. அந்தோ! பழிகாரச் சமுகமே! இப்போது நீ கூறு, இவள் தாழ்ந்த சாதியா?

அன்பினுக்கு—உண்மைக் காதலுக்கு ஆட்பட்ட என் இதய மோகினி—தியாகத்தால் உயர்ந்த சாதி ஆகிவிட்டாளே!

உணர்ச்சியால், உள்ளத்தால், எண்ணத்தால், செயலால் பிற சாதியார் செய்ய முடியாததைச் செய்து காட்டிப் பண்பால் உயர்ந்த சாதியாகி விட்டாளே!

ஏ சதிகாரச் சமுகமே! உயர்ந்த சாதியென நீ கருதும் மக்களில், என் உள்ளத்து அரசியைப் போன்ற ஒரு மாணிக்கத்தைக் காட்டமுடியுமா? உன்னால்.

ஏ நயவஞ்சகச் சமுகமே! இனி நான் மட்டும் இவ்வுலகில் வாழ்ந்து என்ன அனுபவிக்கப் போகின்றேன்! ஏ கொலைகாரச் சமுகமே! உன் தீய சாதிப் பித்திற்காக—பொல்லாச் சமய பேதத்திற்காக—உயர்வு தாழ்வு எனும் பண்பிலாச் செயலுக்காக—பணத்திமிர் எனும் அநீதிக்காக என்னையும் ஏற்றுக்கொள்—பலியாக. என் குருதினையும் குடித்து என் உயிரையும் உண்டு, முடைநாற்றம் வீசும் உன் மூடநம்பிக்கையை—அதன் அடங்காப் பசியை அடக்கிக்கொள்.

எங்கள் இருவரது உயிரையும் ஒருசேரக் கொண்டபின்பாவது உன் மூர்க்கத்தனத்தை விடு! ஏழைக்கு ஒரு நீதி, பணக்காரனுக்கு ஒரு நீதி எனத் தீர்ப்பு வழங்கும் உன் ஆணவப்போக்கை ஒழி. உன் நயவஞ்சகப் போக்கைத் தொலை.

இதோ இந்த ஒரு துளிவிஷம் என் செல்வி சென்ற இடத்திற்கு என்னையும் கொண்டுபோய்விடும்.

★

விரைவில்!

அரங்கண்ணல்

அளிக்கும்

தொடரோவியம்

துவங்கும்.

★

வாத்தியார் வையாபுரி

தன் மதிப்பை விட்டுக் கொடுக்காமல், ஆனால் அன்போடு பேசும் அவர் ஆரம்பப்பள்ளி ஆசிரியர். அவருடைய ஆடை, அணிகலன்களை அதைக் காட்டி விடும். அதிலும் அனுபவம் மிகுந்தவர் என்பதை, அவரது அமைதியான முகம் காட்டிவிடும். ஆயிரக் கணக்கான பேருக்கு அறிவுக் கண்களைத் திறந்துவிட்ட அவருக்கு, அழுக்கேறிய கயிற்றால் பிணைத்திருக்கும் கண்ணாடிதான் பார்வையைத் தந்தது.

ஆசிரியர் என்ற காரணத்தினால் மட்டுமே, ஐயர் என்று அன்போடு அழைத்தனர் வஞ்சிப்பாளையத்துக் காலஞ்சென்ற நல்லவர்கள். அன்று வையாபுரியிடம் படித்த, அந்தக் காலஞ்சென்ற நல்லவர்களின் வாரிசுகள், "வாத்தியார் வைய்யாபுரி," எனத் திருநாமம் சூட்டியிருக்கின்றனர்—தாங்கள் பெரிய மனிதர்கள் ஆனதினால்.

வாத்தியார் வையாபுரி வயோதிகத்தின் விளிம்பில் நின்றுகொண்டிருந்தார். வயது ஐம்பத்து ஐந்து. வஞ்சிப் பாளையத்திற்கு அவர் வாத்தியாராக வந்தபோது வாலிபன். வனப்பு வண்ணங்காட்டி நின்றது. இன்று வரி விழுந்த கிழடு.

சித்திரம் போட்டுக்காட்டி எழுத்துக்களின் வளைவு, நெளிவுகளுக்கு எப்படி எப்படிக் கோடு இழுக்க வேண்டும் என்று சொன்னாரோ, அந்தக் கோடுகளெல்லாம் முகத்திலே பதிந்திருந்தன.

❖

எந்தக் காலத்திலோ, எதற்கோ கட்டிய மண்டபம், கோயிலுக்காகத்தான், என ஊர்ப் பூசாரி சொல்லிய கல்மண்டபம். அதில்தான் ஒரு சுவரில் கரியைப் பூசிப் பள்ளியைஆரம்பித்தார். நாட்டாண்மைக் கழக நிர்வாகத்தினர் பல கைகளும், மேசையும், படங்களும் கொடுத்தனர். தங்கள் நிர்வாக யந்திரத்திற்கு, நேர் உவமை ஏன்று சொல்லத்தக்கபடி கடிகாரம் ஒன்றையும் தந்தனர். கடிகாரம் மணி காட்டும் வரை காத்திருக்க விரும்பாமலோ என்னவோ, பொழுதைக் கண்டே மணியடித்து வந்தார் வையாபுரி.

ஆலமரத்தடியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவர்களையெல்லாம், ஆரம்பப்பள்ளியில் சேர்த்து, அரும்பாடுபட்டு உழைத்தார். ஆரம்பப்பள்ளி, உயர்தர ஆரம்பப் பள்ளியாகஉயரும்வரை ஓயவில்லை. இடையில் எத்தனையோ ஆண்டுகள்! ஒரே ஆசிரியர்தான் அன்று: இன்று ஒன்பது ஆசிரியர்கள்.

வாத்தியார் வையாபுரிதான், வஞ்சிப்பாளையத்தைச் சுற்றி ஆறு மைல்களுக்குள் படிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் குரு. அதாவது எழுத்தறிவித்த இறைவன்.

கட்டு விரியனும், கருந்தேளும் குடியிருந்த கல் மண்டபத்தை இடித்து, "காங்க்கிரீட்" தூண்களை நிறுத்திக் கண்கவரும் கட்டிடமாய் மாற்ற, கடுமையாக உழைத்தவர் வையாபுரிதான்.

ஜி. ஜி. தனராசன்

விவசாய சங்கத்து, முழு நேர ஊழியர் காம்ரேட் கைலாசநாதன் விநாயகர் கோயில் கட்ட எடுத்துக் கொள்ளும் முயற்சி, வையாபுரி பட்ட பாட்டில் நூற்றில் ஒன்று கூட இராது.

பத்தொன்பது வயதில் பள்ளி ஆசிரியராகப் பணியேற்ற வையாபுரி அடைந்த அனுபவம் கொஞ்சநஞ்சமல்ல வஞ்சிப்பாளையத்தில் வாழவந்த அவர், வஞ்சிப்பாளையத்தின் வாழ்வுக்கே உழைத்தார்.

22 வயதில் மணம் செய்து கொண்டார். 24 முதல் 30 வரை இரண்டு பெண்ணும் இரண்டு ஆணுமாக நான்கு குழந்தைகளைப் பெற்றார். 32 லிருந்து 44க்குள் நான்கு குழந்தைகளையும் இழந்தார் ஒவ்வொன்றாக. 36ல் மனைவியையும் தத்தம் செய்தார். "கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" என அவர் வாய் சொன்னாலும், வறுமைதான் காரணம் என அவர் உள்ளம் உணர்த்துவதை முகம் காட்டிவிடுகிறது.

தனி வாழ்க்கையில் மட்டுமல்ல, கல்வியிலும் நிறைந்த பல அனுபவங்கள் அவருக்கு. எத்தனைவிதமான முறைகள். எத்தனை எத்தனை சாதனங்கள்—பாடங்கள்—பாடத் திட்டங்கள் — கல்விச் சட்டங்கள்—கொள்கைகள்— ஆராய்ச்சிகள் — ஆராய்ச்சிக் குழுக்கள். எல்லாம் கீரல் விழுந்த அவரது கன்னங்களின் ஓரங்களுக்கே அடக்கம்.

தற்காலப் புதுத் திட்டங்களைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும். மட்டமாக இருந்தாலும் சரி, நட்டமடைந்தாலும், சட்டம் என்ன சொல்கிறதோ; அதன்படிதான் செய்வார். இது அவரது பள்ளி அனுபவங்களுக்கெல்லாம் கிரீடம் வைத்த உண்மை! எத்தனை பள்ளித் தணிக்கையாளர்களைச் சந்தித்தவர்—எத்தனை ஆசிரியர்களின் வாழ்க்கையை அறிந்தவர். அவர் செயலுக்குப் பொருள் இல்லாமலா இருக்கும்!

ஏழைக் குழந்தைகளுக்குப் பகல் இலவச உணவு அளிக்கும் திட்டம் வந்தவுடன், 20 பேருக்கு இலவச உணவுக்கு ஏற்பாடு செய்தார். "ஏதுங்க? உங்க ஊரிலே பிரமாதமா ஏற்பாடு செஞ்சுட்டீங்களே! நன்கொடைஎவ்வளவுகெடச்சுதுங்க?" என்று கேட்கும் ஆசியர்களுக்கு, வரட்டுப் புன்னகையைப் பதிலாகத் தந்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டார். அவர் நன்கொடை வசூலுக்குப் போனால் கையெழுத்துப் போடத் தெரியாததோடு, அறிவின் வாடையே பெறப்படாதவர்களுக்கும்கூடக் கல்வி போதனையைப் பற்றி விமர்சிக்கும் அபூர்வ நிலை அவருக்குத் தெரிந்ததுதான், என்றாலும் மீண்டும்மீண்டும் கேட்க வேதனையாகத்தானே இருக்கும்? சாட்டையடிபட்ட காளைபோல்,அவரது தன்மான உணர்வு துள்ளிக் குதித்தது, கொம்பைச் சரித்துக் கொண்டு, பொறுமை என்னும் மூக்கணாங்கயிற்றை இழுத்துப் பிடித்துக்கொண்டார்.

இருபது பேருக்கு இலவச உணவு அளிக்கிறாரென்றால், தமது சொந்தப்பணத்தில்தான். கடந்த

ஒன்பது ஆண்டுக்கால, தனி வாழ்க்கையில் மிச்சமாகிய பணமல்ல; மனைவிக்கு மருந்துச் செலவிற்கு வாங்கியகடனையே இன்னும் கட்டவில்லை. ஆசிரியர்தமது பாதுகாப்பு நிதிக் கணக்கில்தான் 300 ரூபாய் கடன் வாங்கி நடத்தி வருகிறார். ஓய்வு பெறும் கட்டத்தை அணுகிவிட்ட அவரைப்பற்றித் தணிக்கையாளர்களின் நினைப்பு எப்படியிருக்கும் என்பது அவருக்குத்தெரியாததல்ல; அதனால்தான் தமது சொந்தப்பணத்தைச்செலவு செய்தார். இதன் மூலம் அவர் தமது மதிப்பைக் காப்பாற்றிக் கொண்டதாக நினைத்தார்.

பள்ளிச் சீரமைப்புத் திட்டம் பற்றிய உத்தரவு வந்ததும் அவர் முகம்வாடிவிட்டது. அடுத்தடுத்து வந்துகொண்டிருந்தன உத்தரவுகள். பாச்சையரித்த பதிவேத்தாள்களை வைத்திருக்கும் கறையான் தின்ற பெட்டியிலேயே அந்த உத்தரவுகளையும் இணைத்துவைத்தார்.

வையாபுரி நன்கொடையாளர் லிஸ்ட் தயாரித்தார். வசூலுக்கும் கிளம்பிவிட்டார்—ஓய்வு நாட்களில் தான். வெளியில் புறப்படும் போதெல்லாம் காப்பிக்கும், வெற்றிலைக்கும் சில்லரை இருக்கின்றதா என்பதை ஒருமுறை சோதித்து நிச்சயம் செய்து கொள்வார். கூர்த்த நினைவுத் திறன்கொண்ட அவர் சோதித்து நிச்சயம் செய்து கொள்வது, காலத்தின் மாறுதலை நன்குணர்ந்த காரணத்தால்தான். அத்தோடு, தமது மதிப்பைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதிலும் அவருக்குஅக்கரை அதிகம்.

பள்ளிச் சீரமைப்புப்பற்றி அவருக்கு முன்னதாகவே தெரியும். ஆற்று மணலைக் கொட்டி, அதில் அமர்ந்து படித்த ஆறு பிள்ளைகளோடு ஆரம்பித்த பள்ளி, உயர்தர ஆரம்பப்பள்ளியாகி ஒன்பது ஆசிரியர்கள் வரை உயர்ந்ததே இந்தத்திட்டத்தால்தானே. பழைய முறைக்குப் புதுப்பெயர்! "ஆர்வத்தாலும், அன்பாலும், ஆதரவோடு நடந்துவந்த முறை—புதுப் பெயர் தாங்கி, அதிகாரிகளின் உத்தரவுகளால் ஏவப்படுகிறது, அவ்வளவு தான்'' என்பார் ஒரு சில ஆசிரியர்களிடம் மட்டும் மெதுவாகத் தம் "கரகரத்த'' குரலில். மதிப்புக்குப் பங்கம் வரக்கூடாது என்ற எண்ணம் அவர் குரலைக் கம்மவைத்தது போலும்!

உறைகிழிந்த கண்ணாடிக்கூடு, இழுத்துக்கொண்டிருக்கும் மேல் சட்டைப்பையில், வியர்வையழுக்கேறிக், கசங்கி, மடிப்புகள் கிழிந்து, உறங்கிக்கொண்டிருக்கும் காகிதம் தான் நன்கொடையாளர் லிஸ்ட். அதில் எழுதப்பட்டுள்ள பெரிய புள்ளிகள் யாருமே நன்கொடை கொடுக்கவில்லை. நன்கொடை கொடுக்கவில்லை என்பதால், அவர்களைக் கொடையுள்ளம் படைத்தவர்களல்ல என்று கூறிவிடமுடியாது. பஞ்சாயத்து போர்டு தேர்தலிலிருந்து பார்லிமெண்டு தேர்தல்வரை, ஒவ்வொன்றினாலும் ஏற்பட்ட தகராறுகள் காரணமாய், அவர்கள் பல கட்சிகளாகப் பிரிந்திருந்தனர். இப்படிப்பட்டபொதுக்காரியங்களில், எந்தக் கட்சியினர் முதலிடம் வகிப்பது? என்ற போட்டியிலேயே எவரும் முன்வராது ஒதுங்கினர். ஊர்க் கட்சிகளின் சிக்கலில் சிக்கக் கூடாது என்பது வையாபுரிக்கு நன்றாகத் தெரியும்.

ஏதாவது ஒரு காரியத்தை ஒரு கட்சியினர் செய்தால், அதற்கு எதிராக மற்றொரு கட்சியினர் கிளம்புவார்கள். இன்னொரு கட்சியார் அதே காரியத்தை அவர்களுக்குப் போட்டியாகச் செய்வார்கள். அப்படித்தான், உள்ளூர் மாரியம்மன் கோவிலுக்கு இரண்டு முறை கிடாய் வெட்டிப் பொங்கல் செய்தனர். ஒரு முறை குழப்பம் வந்து ஊரடங்குச் சட்டம்கூடப் போட்டனர். வையாபுரிக்கு இதில் வருத்தம்தான் மிச்சம். காம்ரேட் கைலாசநாதர் மூன்று கட்சி முக்யஸ்தர்களுடனும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி (அதாவது குழப்பம் விளைவிக்காமல் விவசாய சங்கத்தாரை நிறுத்தியதும், குழப்பம் செய்யச்சொல்லித் தூண்டியதும் ஆக இரண்டு காரியத்திற்கும்) 2000 ரூபாய் அவருக்கு மிச்சம்.

ஊர்ப் பிரமுகர்கள் தங்கள் கொடைச் செயலை நிறுத்திக் கொண்டது ஆச்சரியமில்லை. அதனால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை மட்டும் அவரால் பொறுக்க முடியவில்லை. தனது மதிப்பை இழக்க விரும்பாமல் தானே இருபது பிள்ளைகளுக்கு இலவச உணவு அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆசிரியருக்குத் தரும் பிச்சைபோல அகங்காரத்தோடு தந்த ஒரு சில பிரமுகர்களின் பணத்தையும் வாங்க மறுத்துவிட்ட காரணமும் அதுதானே.

அதோடு விட்டுவிடும் என்று தான் ஆசிரியர் வையாபுரி நினைத்தார். ஆனால் அடுத்தாற்போலவே பள்ளிச் சீர்திருத்தத் திட்டமும் வருமென்று அவருக்கு எப்படித் தெரியும்?

சுற்றிச்சுற்றி வந்தார்; வெயிலுக்கும் மழைக்கும் அவர் தயங்கவில்லை; செருப்பும் குடையும் இல்லாமலிருந்துங்கூட. அவர் மனநிலை அப்படியிருந்தால் மழையும் வெயிலும் நின்றுபோகும்?

தும்மினார்— இருமினார்— சுருண்டு படுத்தார்!

ஒரு எல். எம். பி. யோ; எம். பி; பி. எஸ். ஸோ வரவில்லை. ஆஸ்பத்திரிச் சீரமைப்புத் திட்டம் என்று ஒன்று ஆரம்பித்து அதற்காக நர்ஸ்களெல்லாம் நாடகமாடவும், டாக்டர்களெல்லாம் நன்கொடை டிக்கட் விற்கவும் போயிருப்பார்களென்று நீங்கள் நினைத்தால், அதற்கு நான் பொறுப்பாளியல்ல. 6000 ரூபாய் செலவில் அரசாங்கம் கட்டிய ஆஸ்பத்திரிக்கே டாக்டர் வராமல் மூடித்தான் கிடக்கின்றது. நாட்டு வைத்தியர் ஒருவர் வந்து நாலுவேரைக்கொடுத்துக் கஷாயம் போட்டுக் குடிக்கச் சொன்னார்.

வையாபுரிக்கு வருத்தமாய் இருந்தது—பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாய் நடத்த முடியாமல் போனதால் மட்டுமல்ல, அதற்குள் அவருக்கு ஓய்வு தந்து விட்டதாக உத்தரவு வந்துவிட்டதால். இன்னும்கூட ஐந்து ஆண்டுகளுக்கு வேலை செய்ய அவர் முயற்சிக்கலாம். அதற்கு யார் யார் தயவையெல்லாமோ நாடவேண்டியிருக்கும். அம்மாதிரியெல்லாம் தனது மதிப்பைக் குறைத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. அதோடு இனியும் இவ்வேலையைச் செய்தால் ஆசிரியர்களுக்கு மதிப்பு என்ற ஒன்று இருக்கவே இடமில்லை எனச் சத்தமாகப் பேசிக்கொண்டிருக்கிறார். என்றாலும் ஆசிரியர் வையாபுரியின் மதிப்புக் குறைந்துகொண்டு தான் வந்தது—அவர் ஒரு வாத்தியார் — அதனால்! வாத்தியார்— அதிலும் ஆரம்பப்பள்ளி வாத்தியார் — அதிலும் வையாபுரியார் போன்ற அமைதிக்கும் அறிவுக்கும் உறைவிடமான வாத்தியார் என்றால், மதிப்போ மரியாதையோ தருவது 'கேவலம்' என்று கருதும் காலமாச்சே இது!!

4-ம் பக்கத் தொடர்ச்சி

தொட்டில்' என்று போற்றப்படும் கிரேக்கத்தில் கூடப் பெண்களின் உள்ளமறிந்து மணவினைகள் நடைபெறவில்லை. அழகிய மங்கையரைத் தூக்கிச் சென்று மணமுடித்தல் (Marriage By Capture) நாடறிந்த வழக்கமாக இருந்தது; வலிவும் பொலிவும் மிக்க வாலிபர்கள் நெஞ்சம் நினைத்த வஞ்சியரை வன்முறையில் கவர்ந்துவந்து மணமுடித்துக் கொண்டார்கள். இதற்குச் சான்று எங்கோ தேடிச் செல்ல வேண்டியதில்லை. கிரேக்கத்தின் புகழார்ந்த ஒரே இலக்கியம் 'இலியட்' விரித்துக்காட்டும் 'ட்ரோசன் போர்' (Trojan war) கூடப், பேரழகி எலனை பாரிசு என்பவன் கடத்தி வந்ததால் நிகழ்ந்ததேயாகும். கிரேக்க மொழியில் மனைவி என்ற சொல்லுக்கே 'டாமர்' என்று பெயர்; இதன் பொருள் 'சண்டையில் கிடைத்த அடிமை' என்பதாகும்!

டாஸ்மேனியர்கள் என்ற இனத்தார் தங்களுக்கு வேண்டிய மனைவியரைத் தங்கள் கூட்டத்திலிருந்தே தேர்ந்தெடுக்கமாட்டார்களாம்; இரவோடிரவாக அயலவர்கள் கூட்டங்களிலிருந்தே கவர்ந்து வந்துவிடுவார்களாம். இவ்வுண்மையை பிஷப் நிக்சன் என்பார் வேடிக்கையாகக் குறிப்பிடுகின்ருர்.

அன்றைய நிலையில் ஆஸ்திரேலியாவின்கண் உள்ள சிட்னியில் வாழ்ந்துவந்தமனிதர்களும் தங்கள் தங்கையோ, தாரமோ, தாயோ அயலவர் கூட்டத்தால் கவர்ந்து செல்லப்பட்டால், உடனே துடித்தெழுந்து போருக்குப் புறப்படமாட்டார்கள்! பதிலாக காலம் நோக்கியிருந்து எதிர்தரப்பினரின் பெண்களைக் கவர்ந்து வந்துவிடுவார்கள். இந்த விந்தையான பழக்கவழக்கங்களை அந்த நாட்டுச் சிறுபிள்ளைகள்கூடத் தம் விளையாட்டில் நடித்துக் காட்டுவார்களாம்!

இந்த வியப்பூட்டும் வழக்கம் இந்தியாவையும் விட்டுவைக்கவில்லை; இம் மணமுறையை 'இராட்சசமணம்' என்ற போர்வையில் 'மனுநீதி' மனமுவந்து வரவேற்றது! ஏன்? பகவான் அவதாரம் கிருஷ்ணமூர்த்திகூட உருக்மணியை வன்முறையில் தூக்கிச் சென்றுதான் கடிமணம் புரிந்தாராம்! (அந்தக் கிருஷ்ணர் இன்று இருந்தால் 'இந்தியன் பீனல் கோர்ட்' சட்டப்படி சிறைச்சாலையில் காலம் கழிக்க வேண்டியிருக்கும்; ஆனல் கடவுளாக மதிக்கப்படுவது விந்தைதான்!)

மாற்ருரின் பெண்களைக்கவர்ந்து சென்று அடிமைப்படுத்துவது பொருமையாலும்விரோதத்தாலும் மட்டுமே என்ற வரையறை இல்லை! விளையாட்டாகவும்கூட இந்தக் கொடிய பழக்கம் நாட்டில் உலவி வந்தது. புகழ்பெற்ற 'புளுடார்க்'கின் காலத்திலேயே நண்பர்கள் என்போர் ஒருவனின் மனைவியை வலியக் கடத்திச்சென்று ஒளித்து வைத்து விடுவார்களாம்! பிறகு அவன் தன் ஆற்றலையும்ஆண்மையையும் பயன்படுத்தி மனைவியை மீட்டுக்கொள்ள வேண்டுமாம்; இந்தப் பயங்கர விளையாட்டை நம்மால் இப்பொழுது கற்பனைகூடச் செய்து பார்க்கமுடியவில்லை!

ஆனல் ஸ்காண்டிநேவியப் பாவாணர்கள் - இங்ஙனமெல்லாம் பாவையரை வன்முறையாகக் கடத்திச் சென்று மணமுடித்தோரைப் பற்றித்தான் நாவாரப் பாடுகிருர்கள்; இம்முறைக்கென்றே தனி இலக்கியம் உண்டாம் அந்நாட்டில்!

நாளுக்கு நாள் ஆண்களின் நெஞ்சம் பண்பட்டு வந்தது; இருவகைக் கூட்டத்தைச் சார்ந்தவர்களும், தூக்கிச் சென்று மணமுடிக்கும் முறையைக் கைவிட்டு, ஒருவர், தாம் மணக்கும் மங்கைக்கு ஈடாக, தம் தமக்கைகளையும் தங்கைகளையும் மாற்றி மணம் புரிவித்தலை (Exchange—Marriage) வழக்கத்திற்குக் கொண்டுவந்தார்கள். இம்முறையில் அடிக்கடி பெண்களைப் பற்றி மட்டுமே நிகழ்ந்து வந்த இரத்தக்களரிகள் ஓரளவு ஓய்ந்தன.

நாளடைவில் 'சேவை மணம்' (Service-Marriage) என்ற புதுவித மணமுறை நடைமுறைக்கு வந்ததாம! தான் விரும்பும் கன்னியைத் தாரமாக்கிக்கொள்ள விரும்பும் ஒருவன் தன் மாமனரிடத்தில் சில ஆண்டுகள் தொண்டுபுரிந்து, பிறகு அந்த மங்கையை மணந்துகொள்வானும். புஷ்மர்களிடமும் ஆஸ்திரேலியர்களிடமும் இவ்வகை மணம் மிகுதியாகத் தலைகாட்டின

இலங்கை தி. மு. க.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம் 13-7-59ல் கொழும்பிலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் செய்யப்பட்டன.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக அகில இலங்கை முதலாவது மாநாட்டில் திரிகோணமலையில் எழுப்பப்படும் தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்கு நிதி திரட்டி அன்பளிப்புத் தருவது என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

இலங்கையிலுள்ள எல்லா மாணவ, மாணவிகளுக்கும் கொடுத்துவரும் பகல் உணவைத் தோட்டப் பாடசாலை மாணவர்களுக்கும் கொடுத்துதவும்படி அரசாங்கத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

தோட்டப் பாடசாலைகளையும் அரசாங்கமே எடுத்து சிறந்த முறையில் நடத்தவேண்டுமென இப்பொதுக்குழு கேட்கிறது.

தமிழ், சிங்கள, ஆங்கில ஆசிரியர்களிடையே பேதமில்லாச்சம்பள முறையைக் கடைப்பிடித்திட வேண்டுமெனக் கல்வி இலாகாவை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாமலிருக்கும் நாடற்றவர் பிரச்சினையை சுமுகமான முறையில் உடனடியாகத் தீர்த்து வைக்கும்படியாகப் பிரதமர் பண்டார நாயகா அவர்களை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

தொகுதி நிர்ணய கமிஷன் அளித்த தீர்ப்பானது, இலங்கை வாழ் சிறுபானமை மக்களுக்கும் குறிப்பாக மலைநாட்டில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடாதபடி தீர்ப்பளித்துள்ளதை இம்பொதுக்குழு கண்டிக்கிறது. இம்மக்களுக்கு கூடுமானவரை பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய முறையில் ஆவன செய்யவேண்டுமென இப்பொதுக்குழு பிரதமரைக் கேட்டுக் கொள்கிறது.

*

வாம்! புனித பைபிளில்கூட ஜேகப் என்பவன் இராக்கேல் என்பவளை மணம்புரிய மொத்தம் ஏழு ஆண்டுகள் பணிபுரிந்ததாக ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.

பின்னர் விலைக்குப்பெற்று மணமுடித்தல் (Purchase-Marriage) டார்ட்டார்களிடமும் செர்மானியரிடமும் மிகவும் வழக்கில் நுழைந்தன. இம் மணமுறை பரவிய இடமெல்லாம் பெண்ணடிமை தலைவிரித்தாடியது. செல்வந்தர்களின் மாளிகைகளில் சேல்விழியர்களின் கூட்டம் மலிவாகக் குவிக்கப்பட்டது. கன்னிப் பெண்களுக்கு விலை மிகுதியாகவும், விதவைப் பெண்டிர்க்கு விலை குறைவாகவும் பட்டியல் தயாரித்து சாக்சன்களும், சீனரும் இம்மணமுறையையே வாணிகமாகவே நடத்தி வந்தனராம்!

மேலும் இந்த முறையில் மணமுடித்தல் மேற்கத்திய நாடுகள் சிலவற்றில் இன்னும் கொடுமையாகக் காட்சியளித்தது; அங்கெல்லாம் இம்மண முறைக்கு 'சந்தை மணம்' (M rket — marriage) என்று பெயர். பாபிலோனில் நடைபெற்ற இப் பரிதாபத்திற்குரிய நிகழ்ச்சிகளை 'பெண் ஏலம்' என்ற தலைப்பில் 'ஹெரடாடஸ்' என்பவர் விளக்கமாகவும் திட்டமாகவும் கூறுகின்றார்.

அங்கங்களை அழகுபடுத்திக் காட்டும் ஆடைகளை அணிவித்து அழகரசி முதல் அலங்கோலம் ஈறாக அனைவரையும் சந்தைக்குக் கொண்டுவந்து, முதன் முதலில் தலைசிறந்த பேரழகியை ஏலத்திற்கு விடுவார்களாம். அவளை விலைக்கு வாங்குபவன்தான் நகரத்தின் மிக மிகச் செல்வாக்குப் பெற்றவனாவான்!

"காயோகாய்" என்பது போல "கன்னியோ கன்னி" என்று ஏலமிடப்பட்ட இந்தப் பொல்லாத வழக்கம் அரேபியாவிலும் அதை யடுத்த நாடுகளிலும் நெடுங்காலம் வரை நீடித்திருந்தது; இச் செய்தி 'ஆயிரத்தோரு இரவுகள்!' அடுக்கிக் காட்டும் கற்பனையல்ல; அன்றுடம் நாட்டில் நிகழ்ந்து வந்த உண்மை நிகழ்ச்சியாகும்.

காலம் பறந்தது; நாகரிகம் எங்கும் மலர்ந்தது; மங்கையர் வாழ்வு நிலையிலும் மதிப்பு உயர்ந்தது; நங்கையர் முன்னேற்றம் பற்றி நாடெங்கும் அறிஞர் பெருமக்கள் பேசத் தொடங்கினார்கள்.

உலகெங்கும் காதல் மணமுறை (Love—marriage) முகிழ்த்தது. இம் மணமுறையே தலைசிறந்தது என அறிவுலகம் ஒப்புக்கொண்டது; சமுதாயத் துறையில் பெருத்த மாற்றம் காண விரும்பி, தென்னாட்டில் தோன்றிய பகுத்தறிவியக்கங்கள் வரதட்சணை, பெண்ணடிமை ஆகியவற்றை வன்மையாகக் கண்டித்துப் புரட்சிப்பாதை வகுத்தன.

மொத்தத்தில் இன்று ஆடவர்க்கு மகளிர் எத்துறையிலும் ஈடானவர் என்ற உயர்ந்த கொள்கை நிலைநாட்டப்பட்டு விட்டது; இனி என்றென்றும் இக்கொள்கை வாழ்வாங்கு வாழும் என்ற நம்பிக்கையும் உறுதியாகி விட்டது.

★







திருச்சி
தி. மு. க.
நகரமன்ற
உறுப்பினர்கள்

1. திரு. பாண்டுரங்கன்
2. ,, பிச்சை
3. ,, நாகசுந்தரம்
4. திருமதி. கமலவதி

குற்றவாளிகளைப் பிடிக்க ஓவியக்கலை!

நல்ல மழை பெய்துகொண்டிருந்தது! வீட்டிலிருப்போரெல்லாம், போர்வையைப் போர்த்திக்கொண்டு, தூங்கிக்கொண்டிருந்திருக்கின்றனர்!! நான் குடியிருந்த வீட்டுமாடியில், வீட்டுக்காரர்கள் இருந்தார்கள். வெளிநாடுகளுக்கெல்லாம் போய்வந்த, இசைமணியொருவரின் வீடு அது. இரவு நேரத்தில், ஒரு திருடன் எப்படியோ தாவி மாடிக்குள் நுழைந்து இருந்த சாமான்களையும் சில்லரை நகைகளையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான். காலை எழுந்ததும் கண்டிருக்கின்றனர்! கத்தினர்! போலீசார் வந்தனர்! புகாரை விசாரித்துக்கொண்டு போய்விட்டனர்!!

மறுநாள் காலை, பஞ்சையான ஒருவனுடன், போலீஸ் அதிகாரிகள் வந்தனர். அந்தப் பஞ்சையைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. என்னுடைய இருதயத்தில், ஏன் சமுகத்தில் இப்படியெல்லாம் திருடனும் கொலைகாரனும் பொல்லாதவனும் உருவாகிறான் என்கிற கேள்வி பிறந்தது. அந்தக் கேள்விக்கு விடை காணுவதென்பது இலேசா! விடை கண்டு போகத்தானே நாம் பாடுபட்டு வருகிறோம்!! இன்ஸ்பெக்டரின் கையில் மூட்டையொன்று இருந்தது. வீட்டுக்காரர்களை அழைத்து, மூட்டையைப் பிரித்து, 'இதெல்லாம் உங்கள் சாமானா தானா?' என்று கேட்டார். ஒரு சாமானும் குறையவில்லை. திருட்டுப் போனதாகச் சொன்ன, அத்தனை பொருள்களும் கிடைத்துவிட்டன. வீட்டுக்காரர்களுக்கு இரண்டு நாளாயிருந்த சோகம் மறைந்தது. எத்தனையாண்டுகளின் சேமிப்போ அந்தப் பொருள்கள்!!

எப்படித் திருடினான்?— இக்கேள்வி, எனக்கு ஏற்பட்டது. இன்ஸ்பெக்டரின் அனுமதியுடன், அத்திருடனைக் கேட்டேன், திருடர்களுடைய தொழில் இரகசியத்தை அறிய, எவருக்கும் ஆவல் பிறக்கத்தானே செய்யும். நாம் திருடப் போகாவிட்டாலும், நம்மிடமிருப்பதை நாளைக்குத் திருட்டுக் கொடுக்காமல் தற்காப்புச் செய்து கொள்ளவாவது இந்த விபரங்களை அறியத் தூண்டத்தானே செய்யும். அத்திருடன் சொன்னான்: "சார்! எனக்கு இது புதிதல்ல. 12வது வயதிலேயே ஆரம்பித்தேன், இத்தொழிலை. பலமுறை சிறைக்கும் போயிருக்கிறேன். சில நாட்களாக, இந்த வட்டாரத்தில் எது வசதியான வீடு என்று சுற்றி வந்தேன். அடிக்கடி பல கார்கள் இந்த வீட்டெதிரில் வந்துபோவதும், இங்கேயிருக்கும் பாடகர் சினிமாவில் பாடுகிறவர் என்றும் கேள்விப்பட்டேன். அதனால், இவர் வீட்டில் புகுந்தால் நல்ல வேட்டை கிடைக்கும் என்று எண்ணினேன். கொல்லைப்புறமிருக்கும் கிணறு வழியாக, சன்னலில் தாவி, ஓரமாக வந்து மாடிக்குள் நுழைய முடியுமெனத் தெரிந்துகொண்டேன். விடியற் காலையில் தானே எல்லோரும் அயர்ந்து தூங்குவார்கள். அந்தச் சமயம் ஏறி எடுத்துக்கொண்டு, வெளிக் கதவைத் திறந்துகொண்டு, போய்விட்டேன்" என்றான். மாடிக்கதவின் தாழ்ப்பாளை அவன் ஒரு சிறு ராம்பால் கொண்டு இலேசாக அறுத்து, எடுத்திருக்கிறான். அதையும், சொன்னான்.

"அதுசரி! இவன்தான் திருடன் என்பதை இவ்வளவு சீக்கிரம் எப்படிக் கண்டு பிடித்தார்கள், போலீஸ் அதிகாரிகள்?"— இந்தக் கேள்வியை, இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே சொன்னார். திருட்டுப்போயிற்று என்கிற சேதி எட்டியதும், எங்களுக்கு முதலில் சந்தேகம் வருவது; அந்த வட்டாரத்தில் யார் 'கேடி', யார் முன்பு சிறைக்குச் சென்றுவந்தவன் என்பதுதான். அநேகமாக இவர்கள் தான், துணிகரமாக ஈடுபடுகிறவர்கள். புதிதாக யாராவது இருந்தாலும், அவர்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமில்லாமலிருக்காது. இப்படிப்பட்டவர்களைப் பற்றி கூடிய வரையில், போலீசாருக்குத் தெரியும். இவர்களுடைய நடவடிக்கைகள், எங்கே போகிறார்கள் வருகிறார்கள் என்பதில் நாங்கள் கண்டும் காணாததுபோலக் கவனம் செலுத்துவதுண்டு. அதோடு, இப்படிப்பட்டவர்களுடைய கை ரேகைகளின் மாதிரிகள் எங்கள் இலாகாவிலிருக்கிறது! இவர்கள் எந்தப் பெட்டியைத் திறந்தார்கள், எந்தக் கதவை ஓட்டை போட்டார்கள் என்று புகார் சொல்லப்படுகிறதோ, அவைகளின்மீதுள்ள ரேகைகளைப் புகைப்படம்எடுத்துப் பார்க்கும்போது, எவன் திருடியிருக்கவேண்டும் என்பதை எங்களால் யூகித்து, அவனைக் கண்டு பிடித்துவிட முடிகிறது!! அப்படியே, இவனையும் பிடித்தோம் என்றார்.

* * *

திருடர்களைக்கண்டுபிடிக்க விரல் ரேகையும், போலீஸ் நாய்களும், பயன்படுத்தும் இந்த நவீன காலத்தில் ஓவியமும் பயன்படுகிறது எனக் கேட்டால் ஆச்சரியமாயிருக்கும்! ஒரு பொது இடத்தில், திடீரென ஒருவன், சவரப் பிளேட்டால் வயிற்றைக் கிழித்துவிட்டு ஓடிவிடுகிறான் —பிக்பாக்கெட் அடித்துவிட்டுப் பறந்துவிடுகிறான் — அவனை எப்படிப் போலீசாருக்கு அடையாளம் சொல்வார்கள்? பச்சைச் சட்டை போட்டிருந்தான்— தலை கொஞ்சம் மொட்டை-மூக்குக் கொஞ்சம் நீளம் —ஆள் கட்டை, இப்படித்தானே எவரும் அடையாளம் சொல்ல முடியும்! இப்படி அடையாளம் சொன்னால் போதும், உடனே "ஆள் இப்படியிருப்பானா?" என்று ஒருவர் படம் போட்டுக் காட்டுவார். "இல்லை! வாய் கொஞ்சம் பெரிதாயிருந்ததே" என்றால், அந்தத்

திருத்தத்தையும் செய்துகாட்டி, "இப்போது சரியா?" என்று கேட்பார். கடைசியில், நாம் கண்ட உருவம் போலவே, அவர் ஓவியம் வரைந்து, திருடன் இப்படித்தானிருப்பான் என்று போலிசாருக்குத் தெரிவிப்பார்!!

இந்த நவீன முறை, அமெரிக்காவின் சிகாகோ நகரில், பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு சமயம், திடீரென ஒரு வீதியில், துப்பாக்கிகள் வெடித்தன. நாலைந்து பேர், பலரைச் சுட்டுவிட்டு ஓடிவிட்டார்கள், போலீஸ் படை வந்தது. அவர்கள்கூடவந்த ஒருஆள், சம்பவம் நடந்த இடத்திலிருந்த சிலரிடம், பென்சிலையும் காகிதத்தையும் எடுத்துக்கொண்டு போனார். அவர்கள் சொன்ன விபரத்தை வைத்துப்படம் போட்டுக் காட்டினார். படத்தைப் பார்த்து, 'இப்படித்தானிருப்பார்கள் அவர்கள்!' என்று சொல்லமுடிந்தது, கண்டவர்களால். அந்தப் படங்களைப் பத்திரிகைகளிலெல்லாம், பிரசுரித்து வெகு சுலபமாக அந்தக் கொள்ளைக் கூட்டத் தலைவனையும் ஆட்களையும் போலிசார் பிடித்து விட முடிந்தது.

துரத்திப்பிடிப்பது, ரேடியோ மூலம் மூலைக்கு மூலை தகவல் அனுப்புவது, ரேகை அடையாளம் இவைகளோடு படம்போடும் முறையையும் சிகாகோ போலீஸ் இலாகா செய்துபார்க்க உதவியாகயிருந்த அந்த ஓவியர் பெயர் அல்வாலஸ் என்பதாகும்.

மூக்கு இப்படியிருந்தால் கண்கள் எப்படியிருக்கும், கண்கள் இப்படியிருந்தால் உதடுகள் எப்படியிருக்கும் என்பன போன்ற அடையாளக் குறிப்புக்களை நீண்டநாள் பயின்று அறிந்தவர், அந்த ஓவியர். ஆதலால், யாராவது சில குறிப்புக்கள் சொன்னால்; அதை வைத்து ஆள் இப்படியிருப்பானென்று அவரால் எழுதிக் காட்ட முடிந்தது. இது, சிகாகோ போலீசாரின் சேவைக்கு மிகவும் பயனளித்தது. இதன் மூலம், கொலைகாரர்கள், திருடர்கள்; பலரை அவர் கண்டு பிடித்துக் கொடுத்திருக்கிறார்.

"குற்றவாளிகளின் மூக்குகளைப் பற்றிய விபரம்தான் எனக்கு முக்கியம். அவனுடைய நெற்றி, வாய் இவைகளும் தெளிவாகத் தெரிந்தால் என்னுடைய வேலை மிக எளிதாகி விடுகிறது. சாதாரணமாக இதுபோன்ற அங்க அடையாளங்களைச் சொல்வதில் ஆண்களை விடப் பெண்களுக்கே நினைவுச் சக்தி அதிகமுள்ளது," என்கிறார் இந்த ஓவியர். ❋

பத்தொன்பதாவது அகில இந்திய

காதி, கைத்தறி சுதேசி அண்டு கைத்தொழில் பொருட்காட்சி

சேலம்-1959.

(சேலம் நகரசபையால் நடத்தப்படுவது)

2-8-1959 முதல் 30-8-1959 முடிய

சேலத்தில் வெகு சிறப்பான முறையில் பொருட்காட்சி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறபடியால் சுற்றுப்புறத் தாலுக்காக்களிலிருந்து ஏராளமான ஜனத்திரள் கூடுகிறது.

நகரின் மத்தியிலுள்ள விஸ்தாரமான போஸ் மைதானத்தில் பொருட்காட்சி அமைக்கப்படுகிறது.

பஸ் ஸ்டாண்டு, தபால் ஆபீஸ், பாங்குகள், சினிமா தியேட்டர்கள், உணவு விடுதிகள் முதலியன அருகில் இருக்கின்றன.

இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் தலைசிறந்த கலைஞர்களைக்கொண்டு

நாள்தோறும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்டால்களுக்கும் மற்றும் தேவையான விவரங்களுக்கும் காரியதரிசிக்கு உடனே எழுதவும்.

நகராண்மை அலுவலகம்
சேலம்
13—6—1959

ஏ. சி. கந்தப்பன்
கமிஷனர் அண்டு காரியதரிசி, பொருட்காட்சி கமிட்டி.

காஞ்சீபுரம் ஏ. திருக்கச்சிநம்பி தெரு 'திராவிடநாடு' அச்சகத்தில் [illegible]